193.

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 27 ‖ நள ஞூ சித்திரைமீ 1௳ [13—4—76] ‖ இதழ் 4

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார்

அருளிய

திருவுந்தியார்—உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி
திரு. வே இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை

(மலர் 27 இதழ்-2 பக்கம் –100ன் தொடர்ச்சி)

வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேறி னார்களென் றுந்தீபற
பெறுவதங் கெண்பெணே யுந்தீபற. (28)

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

அநாதி காலம் தொட்டு உயிர்க்குயிராய் ஒளித்திருந்து உபகரித்து வருகிற சிவத்தை உணரும் மெய்ஞ்ஞானத்தை, அநுபவம் உடைய ஞான தேசிகரது கருணையினால் பெற்றுப், பிறப் பிறப்புக்களுக்குக் காரணமாகிய பாச பந்தங்களைக் கை விட்டவர்கள், மீளாத பரமானந்தத்தைப் பெற்றவர்களாவார் கள் இவ்வாறின்றிப் பாச பந்தங்களிலேயே அகப்பட்டு நின் றால், அங்கே எதைப் பெற முடியும்?

உயிர்கள் உய்தி பெறுவதற்கு வித்தாக இருந்து உதவு வது சிவஞானம். சிவஞானத்தைப் பரஞானம். மெய்ஞ் ஞானமென்றும் அருள் நூல்கள் கூறும். பரஞானமாகிய சிவ ஞானத்தைப் பெறுவதற்கு அபர ஞானமாகிய கலைஞானம் சாதனமாயிருக்கும், அபரஞானம் ஆன்ம முயற்சியினாலே பெறத் தக்கது. பரஞானம் அங்ஙனம் ஆன்ம முயற்சியினால் பெறத் தக்கதன்று. ஞானதேசிகரது அநுக்கிரகத்தால் தீட்சைப் பேற்றைப் பெற்று, நற்றவத்தில் ஒழுகி அயரா அன்பு செய்யும் பக்குவான்மாக்களுக்குச் சிவபெருமானது திருவருளால் சித்திப்பது பரஞானம், வேதாகமங்களைக் கற்றுத் தெளிந்த கலை ஞானமாகிய அபர ஞானம் ''சிவபெரு மானொருவரே பரமபதி'' என்னும் துணிவை உண்டாக்கும், கலையறிவு, சிவத்தைப் பரமபதி என்று உணர்த்தாத வரை அவ்வறிவால் ஏதும் பயனில்லை. ''பல கலையாகமம் வேதம் யாவையினும் கருத்துப் பதிபசு பாசம் தெரித்தல்'' என்னும் சிவப்பிரகாசம், இதனைத் தெளிவு செய்யும்.

கலையறிவு, சிவத்தின் ஒப்புயர்வற்ற மேன்மையை உணர்த்தத், திருவருள் அச்சிவத்தைப் பெறுதற்குரிய சிவ ஞானத்தை நல்கி, உய்தியை உதவும். இதனைத் தமிழ் வேதம் ''கற்றீண்டு மெய்ப் பொருள் கண்டார். தலைப்படுவர், மற் றீண்டு வாரா நெறி'' என்று அறிவுறுத்துகின்றது. சிவ ஞானம் சித்திப்பதற்கு ஞானதேசிகரது நல்லருளாற் கிடைப் பது திருவைந்தெழுத்து. தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு, அன்னியம் இன்மையின் அரன்கழல்செல்லும் ஆன்மாவுக்கு ஊனக்கண் பாசம் உணராப் பதியை. ஞானக்

கண்ணினிற் சிந்தை நாடி, உராத் துனேத் தேர்த்தெனப் பாசம் ஒருவத், தண்ணிழலாம் பதி என்பது சிவஞான போதம்.

எல்லா உயிர்களிடத்திலும் அநாதி காலத்திலிருந்தே உயிர்க்குயிராய் ஒளித்திருந்து உதவி புரிந்து வருகின்ற சிவம், பக்குவான்மாக்களுக்கு உய்தியை அருள ஞானதேசிகரை இடமாகக் கொண்டு வெளிப்பட்டு வரும்.

அருட்சத்தி பதிதற்குரிய மேல் நிலையை அடைந்த உயிர், சிவதீட்சைப் பேற்றினல் வினை நீக்கத்தை அடையும். சகல நிலையில் பற்பல உலகங்களிலும் சென்று ஈட்டிய நல்வினை-தீவினையின் தொகுப்புக்களாகிய சஞ்சிதம், தீக்ஷைக் கிரியை யில் ஞானதேசிகரால் ஒழிக்கப் பெறும். எடுத்த பிறப்பின் அநுபவத்துக்காக இருக்கும் பிராரத்தம், தீக்ஷாவானின் தேகம் உள்ளவரை நின்று இன்ப துன்பங்களைத் தருமாயினும், திருவருள் அவ்வின்ப துன்பங்கள் அவனைத் தாக்காதிருக்கு மாறு வைக்கும். பிராரத்த அநுபவத்தின் போது உண்டாகும். விருப்பு—வெறுப்புக்களால் வரும் ஆகாமியம், ''யான் செய் தேன் பிறர் செய்தார் என்னது யானென்னும் இக்கோணையை ஞான ஒளியால் வெதுப்பித் தான் செவ்வே நிற்கும் தீக்ஷா வானிடம் ஏறுமாறில்லை. இங்ஙனம் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் ஆகிய மூவகை வினைகளும் தீக்ஷைப் பேற்றின் அடிப்படையில் நீங்கியொழிய, மூவகை மலங்களில் கன்ம மலம் இல்லையாகிவிடும். கன்மம் இல்லையாகவே, அதன் அடிப் படையில் நிகழுகிற பிறப் பிறப்புக்களும், அவற்றிற்கு ஆதார மான மாயா மலமும் நீங்கிவிடும். இந்த நிலையில் அந்த உயிரை அநாதியே பற்றி நின்ற ஆணவமலம் சத்தி கெட்டுப் பரி பாகத்தை அடையும். மலபரிபாகமே, திருவருள் பெறுவதற் குத் துணையாயிருப்பதாதலின், இறுதியில் சிவப்பேறு நிகழ்ந்து பேரின்பத்தில் உயிரை நிலை நிறுத்தும்

ஆசாரிய அநுக்கிரகம், ஒருவருக்கு எளிதில் கிடைக் கின்ற ஒன்று அன்று. ஞானதேசிகரது நல்லருளைப் பெற வேண்டுமென்ற விருப்பம், இடையறுது ஒருவரிடத்திலே

நிலை நிற்க இறைவனது திருவருளும் அதற்குத் துணையாக வந்து கூடுகின்ற பொழுதுதான் சிவதீக்ஷைப் பேறு சித்திக்கும் இதனை ''நாதனாகிய தன்னையும் என்னையும் நல்கும், போதனாகிய குருபரன் வருவதெப்பொழுதால்'' என்று திருவாதவூரடிகள் சிந்தித்திருந்ததைக் கூறுவதால் அறியலாம். உயிர்களுக்கு எல்லாவற்றையும் மறைந்து நின்று காட்டுகின்ற திருவருள், பக்குவமுடைய உயிர்களுக்கு வெளிப்பட்டு வந்து தன்னைக் காட்டும், ''காட்டும் திருவருளே கண்ணாகக் கண்டு பர வீட்டின்ப மெய்ப் பொருளை மேவுநாள் எந்நாளோ'' என்பது தாயுமான அடிகள் திருவாக்கு.

சுக, துக்க மோகங்களுக்கு இடமாகிய தேகாதிப் பிரபஞ்சங்களைக் கைவிட்டுச் சிவஞானமாகிய வித்தைத் தேடியவர்களே பரமானந்தத்தில் திளைக்க முடியும்.

(தொடரும்)

" ஞானசம்பந்தம் "

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 6-00 வெளிநாடு ரூ. 10-00

செயலாளர், '' ஞானசம்பந்தம்'' அச்சகம் "

தருமபுரம், மாயூரம் P. O.

"சைவ வைணவ ஒற்றுமையும் தந்தை தாய் ஒற்றுமையும்"

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்,
இளவரசு, மதுரை ஆதீனம்.

உலகத்தில் மக்களாய் பிறந்திருக்கிற நமக்குத் தந்தையும், தாயும் இன்றியமையாத இரு தெய்வங்கள். அதனாலேயே, ''அன்னையும்-பிதாவும் முன்னறி தெய்வம்'' ''தந்தை தாய்ப் பேண்'' என்று கூறியிருக்கிறார் நமது அவ்வைப்பிராட்டியார். முன்னறி தெய்வம் என்றதனாலே, பின் அறியவேண்டிய தெய்வம் இரண்டு உண்டு என்பது பெறப்படுகின்றது அவர்கள் தான் சிவபெருமானும் மகாவிஷ்ணுவும்.

குழந்தையாகப் பிறந்திருக்கிற எவருக்கும் தந்தையாரும் வேண்டும், தாயாரும் வேண்டும். தந்தையின்றி, தாயும் குழந்தையை உண்டாக்க முடியாது தாயின்றித் தந்தையும், குழந்தையைப் பெறமுடியாது. குழந்தைக்குத் தந்தையும், தாயும் இருகண்கள் போன்றவர்கள். தந்தை என்றபெயரும் தாய் என்ற பெயரும் குழந்தைகளைப் பெற்றவர்களுக்கே உண்டு. குழந்தை பெறாதவர்களை, கணவன்-மனைவி என்று தான் சொல்லுவோம்.

தந்தை-தாய் என்று சொல்லுகின்ற பெயர்களுமே, குழந்தைப் பேற்றினாலேயே ஏற்படுகின்றன. நன்றியறிதல் உள்ள நல்ல அறிவுடைய எந்தக் குழந்தையும், தந்தை மட்டுமே வேண்டும்; தாய் வேண்டாம் என்றோ, அல்லது தாய்மட்டுமே வேண்டும் தந்தை வேண்டாம் என்றோ சொல்லாது! தந்தையும் தாயும் ஆகிய இருவரும், குழந்தைகளின் இருபெரும்நலன்களில், கருத்து உடையவர்களாக இருப்பார்கள்.

தந்தை, குழந்தையின் அறிவின் அபிவிருத்தியிலும், தாய் குழந்தையின் உடலின் அபிவிருத்தியிலும் கண்ணும் கருத்து

மாக இருக்கிறூர்கள் என்பதை, யாவரும் ஒத்துக் கொள்வர். ஆகவே, குழந்தைகளாகப் பிறந்த யாவரும் அவரவரது தாயி டத்திலும், தந்தையிடத்திலும் நன்றி உடையவர்களாகவும், அன்பு உடையவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டியதே நியாயமும், அறிவுடைமையும் ஆகும்.

அடுத்ததாக, குழந்தைகளைப் பெற்ற எந்தத் தந்தையும், தாயும் தங்களது விருப்பம்போல், குழந்தைகளைப் பெறமுடிய வில்லை என்பதை ஒத்துக் கொள்ளுவார்கள் அதுபோலவே எந்தக் குழந்தையும் தனது விருப்பம்போல் தனது பெற்ரூ ரைத் தேடி சேர்ந்து கொள்ள முடியவில்லை. என்பதையும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். எனவே, யார் யாரை எங் கெங்கு, எந்தத் தந்தை தாயாரிடம் பிறக்க வைக்க வேண் டுமோ, அவரவரை அவர்களது கன்மத்திற்கு ஏற்ப பிறக்கும் படி செய்வதும், அவரவர்க்கு உரிய உடலைக் கொடுப்பதும் அப்பனும், அம்மையுமான ஒப்பற்ற ஆண்டவனேயாகும். இவ்வுலகில் உள்ள தந்தையும் தாயும் ஆண்டவன் அவர்களுக் குக் கொடுத்த பிள்ளைகளைப் பெற்றவர்கள் ஆகின்றூர்கள். எனவேதான், அவர்கள் "பெற்ரூேர்" என்று அழைக்கப் படுகின்றனர்.

நமது பெற்ரூேர்கள் இந்த ஒரு பிறவிக்கு மட்டுமே பார முள்ள தூல உடலைக் கொடுக்கின்ற தந்தையும்தாயும் ஆகின் றூர்கள். ஆனல் ஆண்டவனே, நமக்கு எல்லாப் பிறவிகளுக் கும் உண்டான உடலைத் தருகின்ற நிரந்தரத் தந்தை தாய் ஆகின்றூன். அப்படிப்பட்ட ஆண்டவன், நமக்குக்கொடுத்த உள்ளுடம்பு (கனவில்தொழிற்படுகின்ற சகல அவயவங்களும் உள்ள பாரமில்லாத ஆவி உடல்) இம்மண்ணுலகில் உள்ள ஐம்பூதங்களாலும் எந்த அணுக்குண்டாலும் எந்த ஆயுதத் தாலும், அழிக்கப் பெறமுடியாதது. நாம் இறந்தபின் அந்த ஆவி உடல் மேல் உலகில் தொடர்ந்து வாழவேண்டிய காலம் வாழ்ந்து, அங்கு அழிக்கப் பெறுகின்றது அதன்பின், அதனை இயக்கிக் கொண்டிருந்த உயிருக்கு மறு பிறவியோ மேல் நிலையோ கடவுளால் கொடுக்கப் பெறுகின்றது.

எனவே, நம்முடைய தூல சரீரத்தையும் சூட்சும சரீரத்தையும் நமக்கு அளித்தவர், என்றுமே அழியாத தந்தையும், தாயுமான ஆண்டவனேயாகும். அதனாலேயே, 'எந்தையாய் எம்பிரான் மற்றும்யாவர்க்கும் தந்தைதாய் தம்பிரான், தனக்கு அஃதிலான்'' என்றும் ''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே'' என்று மணிவாசகரும் ''அப்பன்நீ அம்மைநீ'' என்று அப்பர் சுவாமிகளும் அருளியிருக்கின்றனர். ஞானசம்பந்தப் பெருமான், தனக்கு ஞானப்பால் கொடுத்தது,

> ''தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
> காடுடைய சுடலைப் பொடிபூசி என்உள்ளங்கவர் கள்வன்
> ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த
> பீடுடைய பிரமா புரமேவிய பெம்மான் இவனன்றே''

என்று அருளியிருக்கின்றார். தனக்குப் பால்கொடுத்த பெருமானது உடலின் இடப்பாகம், பெண்பாகமாக இருந்த காரணத்தினாலேயே, அப்பாகத்தில் உள்ள காதில் பெண்களுக்குரிய 'தோடு' இருந்ததைக் கண்டே 'தோடுடைய செவியன்' என்று கூறினார். அதனாலேயே சிவபெருமான் 'உமையொரு பாகன்' என்றும் 'மாதொருபாகன்' என்றும் அருளாளர்கள் கூறியிருப்பதை நாம் இங்கு நோக்கவேண்டும்.

இனி அப்பெண்பாகம் மகா விஷ்ணுவைக் குறிக்கின்றது என்பதற்கு சைவ சமய ஆச்சாரியர்களும் வைணவசமய ஆழ்வார்களும் சந்தேகத்திற்கு இடமின்றி நேரில் கண்டு கூறியிருப்பதை நோக்குவோம்.

> ''மண்ணினை யுண்ட மாயன் தன்னை ஓர்பாகம் கொண்டார்
> பண்ணினைப் பாடி ஆடும் பத்தர்கள் சித்தம் கொண்டார்
> கண்ணினை மூன்றுங் கொண்டார் காஞ்சிமாநகர் தன்னுள்ளால்
> எண்ணினை எண்ண வைத்தார் இலங்கு மேற்றளியனாரே.''

என்றும்,

> ''எரியலால் உருவமில்லை ஏறலால் ஏறலில்லை
> கரியலாற் போர்வையில்லை, காண்டகு சோதியார்க்கு
> பிரிவிலா அமரர் கூடிப் பெருந்தகைப் பிரான் என்றேத்தும்
> அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே''

என்றும் அப்பர் சுவாமிகள் கூறுகின்றார்.

அடுத்து, பேயாழ்வார் திருவேங்கட மலைக்குச் சென்றார். அங்குள்ள பெருமானைக் கண்டார். கண்டதைக் கண்ட வாறே பிறர் அறிந்து கொள்ளுமாறு கூறுகின்றார்.

"தாழ்சடையும், நீள்முடியும், ஒண்மழுவும், சக்கரமும்,
சூழ் அரவும், பொன்நாணும், தோன்றுமால் சூழும்
திரண்டு அருவி பாயுந் திருமலை மேல் எந்தைக்கு
இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து"

இதன் பொருள்: ஒருபுறம் சடைமுடியும், மற்றொரு புறம் மணிமுடியும் ஒருகரத்தில் மழுவும், மற்றொரு கரத்தில் சக்கரமும் ஒரு பாதியில் நாகாபரணமும், மற்றொரு பாதி யில் பொன் ஆபரணமுமாக அவ்வுருவம் காட்சி தருகின்றது என்பதாம்.

மேலும், திருமங்கை ஆழ்வார் தாடாளப்பெருமாள் பாட லில் "பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து" என்றும், அப்பர் சுவாமிகள் திருவீழிமிழலைப் பதிகத்தில் "நாரணனை இடப்பாகத்து அடைத்தார் போலும்" என்று அருளியிருப்பத னல், ஒரே உருவத்தில், வலப்பாகத்தில் சிவபெருமானும், இடப்பாகத்தில் மகாவிஷ்ணுவுமாக இருந்து அருள்புரிகிறார் கள் என்று கண்டவர்கள் கூறியிருக்கும் பொழுது, காணாத வர்கள் வீண்வாதம் புரிவதில் நியாயம் ஏதும் இல்லையல்லவா?

அருணகிரிநாதர் தனது திருப்புகழில்,

"ஈசர் விஷ்ணுவை சேவை செய்வோர் தமை இகழ்வோர்கள்
ஈனர் இத்தனை பேர்களும் ஏழ் நரகுழல்வாரே"

என்கிறார்.

சிவபெருமானையும், திருமாலையும் இகழ்பவர்கள் ஈனர்கள் அவர்கள் எரிவாய் நரகிடை வீழ்ந்து இன்னல் எய்துவார்கள். அவ்வாறு இகழ்வதைப் பற்றி கூர்மபுராணமும் மிகத் தெளி வாகக் கூறுகிறது

"தன்னை இகழ்தல் பொறுத்திடினும் தனது இல் கிழந்தினை இகழின்
மன்னும் சீற்றம் மிகும் எவர்க்கும் மற்று ஆங்கு அதுபோல் மாயோனை
உன்னிச் சிறிதே இகழ்ந்திடினும் ஒறுக்கும் ஈசன் ஆதலினல்
கன்னித்துளவோன் இறைவன் எனப்பிரிந்து ஓதிடுதல் கடனன்றே"

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

29, C. இருவர் செய்த குற்றங்கள் யாவை?
(அப்பர் சுவாமிகள் சரித்திரம்)

அம்மைக்குத் தனியாக உருக்கிடையாது. இறைவனின் அருளே அம்மையாக வந்தது என்பர். இறைவனது அருள் தான் உலகையழிக்க வந்தவிடத்தை யுண்டு உலகைக் காப்பாற்றியது. எனவே அம்மையின் பாலுண்ட சம்பந்தப்பெருமானை அருட்கடல் என்றார் அருள்மொழித்தேவர். தேவியின் அருள் உலகமீன்றது. இறைவன் துன்பத்தை நீக்குவார். அம்மை அருளுவாள். சமணரின் துன்பத்திலிருந்து உலகைக் காப்பாற்றியவர் சம்பந்தர். திருத்தாண்டகம்பாடி உலகைக் காப்பாற்றியவர் அப்பர், எனவே சைவத்தின் இருகண்கள் சம்பந்தரும் அப்பரும் எனக் குறிப்பிடப் பெறுகின்றது. இருவரும் சீகாழியில் சந்தித்தனர்.

அருட்பெருகு தனிக்கடலும்; உலகுக்கெல்லாம் அன்புசெறிகடலுமாம் என
ஓங்கும்
பொருட் சமயமுதற் சைவநெறிதான் பெற்ற புண்ணியக்கண் இரண்டெனவும்:
புவனமுய்ய

(முன் பக்கத் தொடர்ச்சி)

எனவே சிவத்தை வழிபடுகின்ற சிவனடியாரை நிந்திக்கின்ற திருமாலடியாரும், திருமாலை வழிபடுகின்ற திருமாலடியாரை நிந்திக்கின்ற சிவனடியாரும் இங்கு மாறுபட்டு வேறுபட்டாலும் வெந்நரகில் ஒன்றுபட்டுவிடுவார்கள். நரகக்குழியில் இரண்டு பேரும் துள்ளிக் குதித்துத் துடித்து, ஒருவருக்கொருவர் நிந்தித்து, இந்த கதிக்கு இருவரும் ஆளானோம் என்று, அங்கு ஒற்றுமைப்பட்டுவிடுவார்கள். எனவே அடியவர்கள் சிவநிந்தனையும், விஷ்ணு நிந்தனையும் புரிந்து நரக வெந்துயருக்கு ஆளாகாது இருப்பதுதான் அறிவுடைமையாகும்.

இருட்கடுவுண்டவர் அருளும்: உலகமெல்லாம் ஈன்ருள் தன் திருவருளும்
எனவும் கூடி
தெருட்கலே ஞானக்கன்றும் அரசும் சென்று செஞ்சடை வானவர் கோயில்
சேர்ந்தாரன்றே.

சம்பந்தரின் வேண்டுகோளின்பாடி சீர்காழியில் தோணியப் பரைப் பாடி, விடைப்பெற்றுச் சத்தி முற்றம் சென்று, தனது தலேயில் திருவடியைச் சூட்டி, திருவடி தீக்ஷை செய்யவேணு மென்று இறைவரை வேண்ட, நல்லூரில் அப்பரை வர வழைத்து "சென்னிமிசை மலர்ப்பாதம் சூட்டினன் சிவ பெருமான்".

கனிந்த பழத்தைத்தான் நாம் உண்ணுகிறோம். காயை உண்ண மாட்டோம். அதுபோல் இறைவன் அடியவர்களாகிய நம்மை நைந்து உருக வைக்கிருன். திருவடி தீக்ஷை செய்த இறைவனே நல்லூரில் திருத்தாண்டகம்பாடி உருகினர் நாவின் வேந்தர்.

திருச்சிற்றம்பலம்

நினேந்துருகும் அடியாரை நையவைத்தார்: நில்லாமே தீவினைகள் நீங்கவைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வைவைத்தார்! செழுமதியின் தளிர் வைத்தார்:
சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத்தேற துற்ற இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனேந்தனேய திருவடி என்தலேமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானர்நல்லவாறே

திருச்சிற்றம்பலம்

பின்னர் திருப்பழனம் செல்ல இறைவனின் காட்சி பெற்று மகிழ்ந்து, திங்களூர் சென்று அப்பூதி அடிகளின் அரவு தீண் டிய மகனேப் பிழைப்பித்து எழச்செய்து திருவாரூர் சென்ருர். (அப்பூதியடிகளின் வரலாறு தனியாக வருவதால் ஈண்டு சுருக்கமாகக் கூறியுள்ளோம்) திருவாரூர்ப் பெருமானே முன் னமேயே தொழாது பரசமயத்தில் இருந்ததை எண்ணி வருந்திப் பாடினர்.

திருச்சிற்றம்பலம்

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியன் தாள் தொழாதே
உய்யலாமென் றெண்ணி உறிதூக்கி உழிதந்தென்னுள்ளம் விட்டுக்
கொய்யுலாம் மலர்ச் சோலேக் குயில்கூவ மயிலாலும் ஆரூரரைக்
கையினுர் தொழா தொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே,

திருச்சிற்றம்பலம்

திருவாரூரிலிருந்தபோது காலபூசைகளை விடாது தரிசித்துக் களிப்படைந்தார். திருவாதிரைத் திருவிழாத் தரிசித்து திருப் புகலூரடைந்தார். சம்பந்தப் பெருமான் அவரை தரிசித்து, திருவாதிரைத் திருவிழாவின் பெருமையைக் கேட்க ஒரு பதி கமே பாடினுர். இது கேட்டு மகிழ்ச்சியடைந்த சம்பந்தப் பெருமான் திருவாரூர் சென்று தரிசித்துத் திரும்பினுர். புக லூரில் அப்பர் பெருமான் சம்பந்தர், திருநீலநக்கர், சிறுத் தொண்டர் முதலானவர்களுடன் நல்ல குழாத்தில் பொழுது போக்கி இனிது வாழ்ந்தார். பின்னர் திருவீழிமிழலை சென் ருர். அக்காலத்தில் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. இறைவன் அப்பர்-சம்பந்தர் இருவருடைய கனவிலும் தோன்றி "உங்க ளுக்கு வாட்டமில்லாவிட்டாலும் உங்களைச் சேர்ந்தவர்களுக் காக உங்களுக்குக் காசு தருகிறேம்" எனக் கூறினுர்.

காலநிலைமையால் உங்கள் கருத்தில் வாட்டமுறீர் எனினும்
ஏல உம்மை வழிபடுவார்க்கு அளிக்க அளிக்கின்றேம் என்று
கோலம் காண எழுந்தருளிக் குலவும் பெருமை இருவருக்கும்
ஞாலமறியப் படிக்காசு வைத்தார் மிழலை நாயகனுர்.

அப்பரும் சம்பந்தரும் தலைவர்கள் எனக்காட்டுவதற்காகப் பணம் தந்தார். தேவையான காசு பஞ்சகாலத்திற்காகப் பஞ்சப்படி தந்தார் கிழக்குப் பீடத்தில் சம்பந்தருக்கும் மேற் குப் பீடத்தில் அப்பருக்கும் காசு வைத்தார் கடவுள் இல்லை என்றவர்கள் கூட, அடியார் வேடம் பூண்டு அப்பரும் சுந்தர ரும் பஞ்சகாலத்தில் உணவிடும் இடத்திற்கு வந்து உணவு கொண்டனர். இதனுலேயே பரம்பரை ஆண்டியா பஞ்சத் திற்கு ஆண்டியா? என ஒரு பழமொழி ஏற்பட்டது

அப்பர் சுவாமிகள் கோயிலைச்சுற்றியுள்ளபுற்பூண்டுகள் கற்கள் முதலியவற்றை யகற்றி உடல் வருந்தச் சேவை செய் தார் எனவே இறைவர் அப்பருக்கு வாசி (வட்டம்) யில்லா மலே காசு தந்தார். சம்பந்தப்பெருமான் தங்கத் தாளம் பெற்று, சிவிகை, முத்துப்பந்தர் முதலான பெற்று மைந்தர் முறையில் பெருமையுடன் வந்தமையால் இறைவன் அவருக்கு வாசியுடன் காசு தந்தார். இதையும் "வாசி தீரவே காசு நல்கு

வீர்'' எனப்பதிகம் பாடி சம்பந்தப் பெருமான் வட்டமில் லாது காசு பெற்றார் என்பது வரலாறு

பின்னர் அப்பரும் சம்பந்தரும் திருமறைக்காடு என்ற வேதாரண்யத்தை அடைந்தனர். வேதங்களால் பூசிக்கப் பட்டு அத்திருக்கோயிலின் வாயிற்கதவு அடைக்கப்பெற்றிருந் தது. ஞானப்பாலுண்ட பிள்ளையார் எழுந்தருளியிருந்தமை யால் அப்பர் தானாக எதுவும் பேசவில்லை 'அப்பரே! கதவு திறக்கப் பாடுங்கள்' என சம்பந்தர் கூற, அப்பர் பெருமான்.

திருச்சிற்றம்பலம்

பண்ணிநேர் மொழியாள் உமைபங்கரோ
மண்ணினார் வலஞ்செய் மறைக் காடரோ
கண்ணினாலுமை காணக்கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே.

திருச்சிற்றம்பலம்

என்று ஆரம்பித்து பத்துப் பாடல்கள் பாடியும் கதவு திறக்க வில்லை. இறைவர் அப்பர் பாடலின் **பயன் துய்ப்பான்** (பாட லின் இன்பத்தை அனுபவிக்க) வேண்டி கதவைத் திறக்கத் தாமதித்தார். நாயனார் தாமதம் கண்டு வருந்தி,

திருச்சிற்றம்பலம்

அரக்கனை விரலாலடர்த் திட்ட நீர்
இரக்க மொன்றிலீர் எம்பிரானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கதவம் திறப்பிம்மினே.

திருச்சிற்றம்பலம்

என்று பதினோராவது பாடல் பாடிய போது திருக்கதவம் திறந்து இருபெருமக்களும் உள்ளே சென்று இறைவனை தரி சித்தனர். வெளிவந்ததும், அப்பர் பெருமான் "கதவு திறக்க வும் மூடவும் என்றுமிருக்க வேணும். நாம் திறக்கப் பாடி னோம்! தாங்கள் மூடுமாறு பாட வேணும்'' என சம்பந்தரை வேண்ட, சம்பந்தப் பெருமான் முதல் பாட்டுப் பாடவும் கதவு மூடிக்கொண்டது. இது கண்ட அப்பர் பெருமான் "நாம் பத்துப் பாடல்கள் பாடியும் கதவு திறக்கவில்லை. ஞான சம்பந்தப் பெருமான் ஒரு பாடல் பாடியவுடன் கதவு மூடிக்

கொண்டது. கதவு திறப்பதில் இறைவனுக்கே விருப்பமில்லை போலும்! நான் திருவுள்ளம் அறியாது தவறு செய்து விட்டேனே!'' எனக் கவலையுடன் துயின்றார். கனவில் இறைவன் தோன்றி திருவாய்மூர் வருமாறு அழைத்தார். அப்பர் பெருமான் உடனே புறப்பட்டுத் திருவாய்மூர்வரும்போது, கனவில் தோன்றிய கோலத்திலேயே, நனவிலேயும் இறைவர் வந்து திருவாய்மூர் வரை அழைத்துச் சென்று திடீரென மறைந்தார். திருமறைக் காட்டிலே விழித்தெழுந்த சம்பந்தரும் திருவாய்மூர் வந்தனர். ''சந்தர்ப்பந் தெரியாது, திருவுள்ளத்தின் தன்மையறியாது கதவைத் திறக்க வேண்டி ''இரக்கமொன்றிலீர்'' என முரட்டுத்தனமாகப் பாடிய என் கண்களுக்கு மறைந்தது சரி. திருவருள் பெற்ற வலிமை மிகுந்த சிவஞானப் பிள்ளைக்காவது காட்சியளிக்க வேண்டாமா?'' எனப்பாடினுர்.

திருச்சிற்றம்பலம்

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப்பாடி யடைப்பித்தாரு நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடையாரிவர் பித்தரே.

திருச்சிற்றம்பலம்

என்று பாடியபோது, சம்பந்தப் பெருமானுக்கு இறைவன் காட்சி கொடுத்தார். சம்பந்தர் ''இதோ இறைவன் காட்சி கொடுக்கிறுர் பாருங்கள்'' என அப்பருக்கும் காட்ட அப்பருக்கும் காட்சி கிடைத்தது. அப்பர் பெருமானும்

திருச்சிற்றம்பலம்

பாட அடியார் பரவக் கண்டேன்: பக்தர் கணம் கண்டேன்: மொய்த்தபூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்: அங்கை அனல் கண்டேன்: கங்கையாளைக்
கோடலரவார் சடையிற் கண்டேன்: கொக்கின் இதழ்கண்டேன்: கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையில்கண்டேன்: வாய்மூரடிகளை நான்கண்டவாறே,

திருச்சிற்றம்பலம்

எனப் பாடினுர். பின்னர் இருவரும் திருவாய்மூரிலிருந்து திருமறைக்காடு திரும்பினர்.

அப்பர் பெருமான் பதிகம் பாடியபோது பத்துப் பாடல்களுக்குப் பின் இறைவன் கதவைத் திறந்தார், சம்பந்தரின் முதற்பாட்டைக் கேட்டவுடன் மூடிக்கொண்டார் என்பது பற்றி ஒரு சர்ச்சையுண்டு. திருமறைக்காட்டிலுள்ள அம்மையின் திருநாமம் யாழைப் பழித்த மொழியம்மை. அம்மையின் அழகிய குரலினிமையில் ஈடுபட்ட இறைவர் திருக்கதவம் திறக்கத் தாழ்த்தினர் என்பது ஒரு பெரியவர்களின் கருத்து அம்மையின் குரல் இனிமையானது என்பது என்றும் உள்ள ஒன்று. அம்மை பராசக்தி எதிரில் கலைமகள் ஒரு நாள்யாழை எடுத்து வாசித்தனள். அதன் இனிமையில் ஈடுபட்ட அன்னை ''அழகு! அழகு'' எனக் கூறிய சொல்லின் இனிமையைக் கேட்ட கலைமகள், தனது வீணையின் நாதத்தைக் காட்டிலும், அம்மையின் குரல் இனிமையாக இருப்பது கண்டு, தனது வீணையை உறைக் குளிட்டாள் வீணைவாசிக்கத் தயங்கி விட்டாள் எனக் கூறுகிறது. ஆதிசங்கராசார்ய சுவாமிகளின் சௌந்தர் யலகரி.

பசுத்தமலர்க் கொடிகருணை பழுத்தனைய
கொம்பே! நின்பரமர் பொற்றேன்
விசைத் தொழிலைக் கலைவாணி தனிற்பாடிப்
பாடி அவண் மெவிவதல்லால்
அசைத்திலர் பொன்முடி உனது மதுரமொழிக்
கசைத்தனர் என்றதற்கு நாணி
இசைத் தொழிலைக் கைவிட்டாள்; எழில் வீணை
உரையிலிட்டாள்! ஏதுசெய்வாள்.

—சௌந்தரியலகரி–66 தமிழாக்கம்
வீரை–கவிராசபண்டிதர்

எனவே அம்மையின் குரலினிமை இறைவனுக்குப் புதிதன்று. அப்பர் சுவாமிகளின், அந்தத் தலத்திற்குப் பாடப்பட்ட பதிகம், புதியது. எனவே பாடலின் பயன் **துய்ப்பான் வேண்டி** இறைவர் கதவைத் திறக்கத் தாமதித்தார். தனது அடியவர் **இரக்கமொன்றிலீர்** என்று கேட்டபோது இறைவன் திருக்கதவம் திறந்தார். கதவு திறந்து ஒரே பாடலைக் கேட்டார். சம்பந்தமூர்த்திகளின் பாடலையும், கதவு திறந்திருந்தபோது ஒரே பாடலைத்தான் கேட்டார். எனவே இருவருடைய

பாடல்களிலும் ஒரே ஒரு பாடலைக் கேட்கும்போது கதவைத் திறந்து வைத்துக் கேட்டு, இருவருடைய ஏனைய பாடல்களை கதவை மூடிக் கொண்டு கேட்டதால் இறைவர் அப்பர் சம்பந்தர் இருவரிடமும் ஒரே மாதிரி கருணைதான் வைத்திருந்தார் என்பது தெளிவு.

அடியார்கள் எது செய்தாலும் ஆண்டவனுக்கு அது உவப்பே. கதவைத் திறக்குமாறு பாடியபோது, பாடலின் மீதுள்ள ஈடுபாடே, தாமதத்திற்குக் காரணம். சம்பந்தருக்குத் திருவாய்மூரில் காட்சி கொடுத்தபோது அப்பருக்கு அதைக் காட்டினார். அடியார் செய்வதை நான் ஒப்புக்கொள்ளுவேன் என்பதை அப்பர் பெருமானுக்குக் காட்டுதற்காகவே, சம்பந்தர் காட்சியைக் காட்டும்படி செய்தார் எனவே தனக்கு யாவரும் ஒன்றே என்பதையும் அடியார் செய்வதெல்லாம் தனக்குச் சம்மதம். தன் திருவுளம் தெரிய வேண்டும் என்று ஆலோசிக்க வேண்டாம் என்று தெய்வசிகாமணி தெளிவாகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புன்கூர்ப் பதிகத்தில் அடியார் குற்றங்களைக் குணமாகக் கொண்டாயென உன் குறைகழலடைந்தேன் என்று கூறும்போது நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக் கரையன் என்று ஆரம்பிக்கிறார்.

சமணர் கழுவேற்றப்பட்டபோது, தடுக்காமல் வாளாவிருந்தது குற்றமென்பர் சிலர். இல்லை. சிவனடியாருக்கு துரோகம் செய்த அவருக்குத் தண்டனையிருக்கட்டும் எனச் சம்பந்தர் இருந்தார். சம்பந்தர் பல இடங்களில் தமிழார் விரகன், சந்தமிகு ஞானமுணர்பந்தம், ஆணைநமதே எனத் தன்னையே பாடிய ஒரே குற்றம் தான் சம்பந்தர் செய்தது அதையே இறைவன் குணமாகக் கொண்டார். சைவ உலகிலேயே என்னப்பன் (அப்பர்) என்னைப் பாடுவான், சம்பந்தன் தன்னைப் பாடுவான், சுந்தரன் காசுக்குப் பாடுவான் என்ற பழமொழியாகவே வழங்குகின்றது.

நாவுக்கரசர் சமணத்திலிருந்தபோது சிவநிந்தனை செய்தது குற்றம் எனப் பேசிக் கொண்டேயிருந்தால் அவருக்கு

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

திருக்குறளும் சைவ சித்தாந்தமும்

"சிவநெறித்தவ மணி"
செல்வி: த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை,
54 ஜடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

உயிர்கள் பல. கடவுள் ஒருவர். இது சைவ சித்தாந்தம். இதனைத் திருக்குறளிலே கடவுள் வாழ்த்து என்னும் முதல் அதிகாரத்தில் ஒவ்வொரு குறளும் உணர்த்துகிறது. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" இக்குறளிளில் ஆதிபகவன் ஒருமையிலும், உலகு (உலகமக்கள்) பன்மையிலும் இருப்பதை உணரலாம். "கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்" இக்குறளில் கடவுளைக் குறிக்கும் வாலறிவன் என்ற சொல் ஒருமையிலும் உயிர்களைக் குறிக்கும் தொழார் எனுஞ்சொல் பன்மையிலும் வந்திருப்பதை அறியலாம்.

அதேபோல மற்ற குறள்களிலும் இறைவனைக் குறிக்கும் மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண் குணத்தான் என்ற

(முன் பக்கத் தொடர்ச்சி)

பெண்ணாகடத்தில் பூதம் ரிஷப-சூல முத்திரைகள் பொறித்ததும், நல்லூரில் இறைவன் திருவடி தீக்ஷை செய்ததும் வீணாகிவிடும். இறைவனுக்கு நெருங்கிய தொண்டராயிருந்தும் 'அவர் திருவுள்ளம் அறியாதிருந்தேனே' என அப்பர் சுவாமிகள் நினைத்திருந்ததுதான் ஒரே குற்றம்? வேறு குற்றமே கிடையாது.

நந்தமிழ்ச் சிவனடியார் குற்றமே செய்ய மாட்டார். அற்ப குற்றம் செய்திடினும் ஆண்டவன் மன்னிப்பான் என்று அறிகிறோம்.

திருச்சிற்றம்பலம்

சொற்கள் யாவும் அன் என்ற ஒருமை விகுதி பெற்றவை யாகவே இருப்பதை உணர்க

இனி வள்ளுவர் கடவுளைப் பற்றிக் குறிப்பிட்ட எண் குணத்தான் என்ற சொல்லுக்குரிய குணங்கள்:- 1. பேராற்றல் உடைமை, 2. முற்றறிவுடைமை, 3. திரிகாலம் உணர்தல், 4 தன் வயத்தனுதல், 5 தூய உடம்பினனுதல், 6 பேரருள் உடைமை, 7. பேரின்பமுடைமை, 8 இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியிருத்தல் என்று சைவ ஆகமம் கூறுகிறது.

உயிர்களுக்கும் அனுதியே சில கெட்டகுணங்கள் உண்டு. அதனை ஆணவம், கன்மம், மாயை என்பர் சைவ சித்தாந்திகள். அதன் விளக்கம் சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் ஒன்ருன இருபா இருபதில் கூறப்பெற்றிருக்கிறது.

1 தனக்குத் தெரிந்ததே உண்மை, மற்றவர் தெரிந்து கூறுவது உண்மையாக இருக்க முடியாது என்ற பிடிவாதம் தலைக்கேறியிருத்தல்.

2. தான் பேசுவதைப் பிறர் கேட்க வேண்டுமென்பதில் விருப்பமும், பிறர் பேசுவதைத்தான் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருப்பதில் விருப்பக் குறைவும் உடைமை.

3. ஆசைப்படுதல் இதனை வள்ளுவர் அவாஅறுத்தல் அதிகாரத்தில் ''அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாஅப் பிறப்பீனும் வித்து'' ஆசையே உயிர்களின் பிறவிக்குக் காரணம் என்று வலியுறுத்துகின்ருர்.

4. கோபப்படுதல் வள்ளுவர் வெகுளாமை என்று ஒரு அதிகாரமே அமைத்து அதில் ''மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய பிறத்தல் அதனுன் வரும்'' என்று கோபத்தின் கெடுதியைக் கூறுகின்ருர்.

5 கொல்லுதலும் கொன்றதைத் தின்னுதலும் கொல்லாமை, புலால் மறுத்தல் என்ற அதிகாரங்களில் இக்குணங்களைக் கண்டிக்கிருர்.

ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்
பின் சாரப் பொய்யாமை நன்று
உண்ணுமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணுத்தல் செய்யாது அளறு

6. பயப்பட வேண்டாததற்குப் பயப்படுதலும், கவலைப் படுதலும். வள்ளுவர்

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்

என்ருர்.

அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதும் இல்லை என்ருர் அப்பரடிகள்.

7. யான் எனது என்னும் அகங்காரமும் மமகாரமும் தலைக்கேறியிருத்தல் 'யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானேர்க்கு உயர்த்த உலகம் புகும்' என்று வள்ளுவர் பெருமான் அருள்உலகிற்கு மார்க்கம் கூறுகின்ருர்.

8. பிறர் வாழ்வதைக் கேட்பதில் விருப்பக் குறைவும் பிறர்தாழ்ந்து போவதில் மகிழ்வும் கொள்ளுதல் இதனை அழுக்காருமை, புறங்கூருமை என்ற அதிகாரங்களால் வள்ளுவப் பெருந்தகை கண்டிக்கிருர்

இறைவனல் ஒரு நியாயத்தீர்ப்புப் போடப் பெற்றே உயிர்கள் உலகில் பிறக்கின்றன. இது சைவ சித்தாந்தம். இதனை 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது'' என்னும் திருக்குறள் தெற்றெனப் புலப்படுத்துகின்றது நாம் நம் சுய அறிவு கொண்டு செய்கின்ற செயல்களே நமது இன்ப துன்பங்களுக்கு வித்தாக அமைகின்றன. இந்த சித்தாந்தக் கருத்தை ஒட்டியே ''நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம் நோய் செய்யார் நோயின்மை வேண்டுபவர்'' ''பிறர்க்கின்னு முற்பகல் செய்யின் தமக்கின்னு பிற்பகல் தாமே வரும்'' என்பன போன்ற குறள்கள் அமைந்திருக்கின்றன.

உலகில் எல்லாஉயிர்களும் இன்பமேஅனுபவிக்க விரும்புகின்றன ஆனல் துன்பமே அனுபவிப்பதற்குரிய செயல்களையே செய்துவருகின்றன. மூலகாரணம் மேலே சொன்ன குணங்கள் உயிரில்அனுதியே பற்றியிருப்பதேயாகும். எனவே

"நோய்நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்றதுபோல உயிரிலுள்ள குணங்களைத் தெய்வீக குணங்களாகச்செய்வதுவே முதலில்செய்யவேண்டிய பயிற்சியாகும். சங்கீதம் தெரியவேண்டுமானால் சங்கீத வித்வானிடம் செல்வது போலவும், ஆங்கிலம் தெரிய வேண்டுமானால் ஆங்கிலம் கற்ற மேதையிடம் செல்வது போலவும், தமிழ்தெரியவேண்டுமானால் தமிழ் வித்வானிடம் செல்வதுபோலவும் உயிரிலுள்ள அஞ்ஞானம் நீங்கி, தெய்வீக குணங்களை அடைய ஒரு ஞானியிடம் சென்று தீக்ஷை பெற்று இடைவிடாத இறை சிந்தனையில் ஈடுபடவேண்டும். இறைவனுடைய சிந்தனையில் இருக்கும் பொழுது ஞான சாகரராகிய இறைவனுடைய ஞானம், உயிரிலுள்ள அஞ்ஞானத்தை வலிமையற்றதாகச் செய்து விடும். இடைவிடாத இறைசிந்தனையைத் தூண்டிவிடுவது எது என்றால் அவ்வாறு செய்வதனாலேயே அவரது திருவருள் சக்தி நம்மிடம் வரக்கூடியதாக இருக்கிறது என்ற மன உறுதியேயாகும் இவ்வுலகில் சிறுஉதவி செய்கின்றவர்களை நாம் அடிக்கடி நினைக்கிறோம் அல்லவா?

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கள்
விழுமம் துடைத்தவர் நட்பு.

என்கிறார் வள்ளுவர். ஆனால் நம்முடைய வாழ்வுக்கு முதலாயிருக்கிறவர் இறைவனே அவரே நமக்கு உடலையும், போகப் பொருள்களையும் கொடுத்து, எல்லா சக்தியையும், எல்லா ஞானத்தையும், பேரருளையும், பேரின்பத்தையும் அளித்து பந்த பாசங்களிலிருந்தும் நம்மை விடுவிக்கிறார் என்ற உண்மையை நாம் திண்ணமாக உணர்ந்து கொண்டால் தினைப் போதளவும் அவரை மறக்கமாட்டோம் அல்லவா? அதனாலேயே திருநாவுக்கரசர் போன்ற அருளாளர்கள்,

பனைக்கை மும்மத வேழமுரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனே.

என்று அருளிச் செய்திருக்கின்றனர்.

212.

திருமுருகாற்றுப்படை

உரை விளக்கம்

" செந்தமிழ்ச் செல்வன் "
புலவர் திரு. சிக்கல். சி. சானகிராமன் அவர்கள்,
தெற்கு வீதி சிக்கல் (அஞ்சல்) நாகை (வட்டம்)

வெற்றி வேல்போர்க் கொற்றவை சிறுவ
இழைஅணி சிறப்பின் பழையோன் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!

உரை விளக்கம்:-

நான் கூறிய இடங்களிலும் பிற எல்லா இடங்களிலும் முருகன் இருக்கிறான். ஆயினும் நீமுதன்முதலாக எவ்விடத்து முருகப் பெருமானை அணுகிக் காண நினைந்தனையோ அங்குச் செல்க. மனத்தால் பொருந்தி முகம் மலர விரும்பி முருகனைத்துதிப்பாயாக! கைதொழுது முருகனைப்புகழ்ந்து சேயோன் திருவடிகளில் வீழ்ந்து வணங்குவாயாக! என்று நக்கீரர் அறிவுறுத்துகின்றார். இனி முருகனைத் துதிக்கும் வழி கூறிப் புலவரை ஆற்றுப்படுத்துகின்றார் வீறுபடைத்த நக்கீரர்.

உயர்ந்த பெரிய இமயமலையின்உச்சியிலே நீலநிறம் விளங்கும் பசுமையான சுனையிலே, ஐம்பூதத் தலைவருள் அக்கினி தேவன் கையில் ஏற்கப் பின்னர் கார்த்திகை மாதர் பெற்றுக் கொள்ள ஆறு திரு உருவங்களோடு கூடிய செல்வனே! கல்லால மரத்தின் கீழ் தட்சணா மூர்த்தியாக வீற்றிருக்கும் சிவபெருமானின் திருக்குமரனே! பெரிய இமயமலைஅரசனின் மகளாகிய பார்வதி தேவியின் மகனே! பகைவர்களுக்குத் தப்பாமல் அழிவைத் தருதலின் யமனைப் போன்றவனே! வெற்றி தரும் வெல்லும் போரைச்செய்யும் துர்க்கையின் புதல்வனே! அழகிய அணிகளைப் பூண்டுள்ள பெருமையுடைய பழையவளாகிய சக்தியின் குழந்தையே! தேவரும் வணங்குமாறு வில்லினைக் கையில் ஏந்திய படைத் தலைவனே!

269-275 மாலை மார்ப! நூல் அறி புலவ!
செருவில் ஒருவ! பொரு விறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன் மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருக!
நசையுநர்க்கு ஆர்த்தும் இசையே ரான!
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டு அமர்கடந்த நின் வென்றுஆடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்!
பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந! குரிசில்!

உரை விளக்கம்:—

போகத்திற்கு உரிய செங்கடம்ப மலர் மாலையை அணிந்துள்ள மார்பினை உடையவனே! எல்லா நூல்களையும் அறியும் பேரறிவு உடையவனே! போர்க்களத்தில் ஒப்பற்று விளங்குவோனே! போரிட்டு வெல்லும் பெருவீரனே! அந்தணர்களின் செல்வமே! மெய்ஞ்ஞானம் பெற்றோர் பேச்சுக்களில் நிலை பெற்ற பரம் பொருளே! தெய்வயானை, வள்ளி ஆகிய மங்கையர் தம் கணவனே! வலிமை மிக்கோருள் ஆண்சிங்கம் போன்றவனே! வேல் சிறப்புற விளங்கும் பரந்தகையினுடைய மிகுந்த பெருஞ் செல்வத்தினை வழங்கும் இயல்புடைய செல்வனே! மலையாக நின்ற சூரபத்மனை அழித்த வெற்றிகொண்டு ஆகாயம் அளாவும் பெரிய மலைகளையுடைய குறிஞ்சி நிலத் தலைவனே! எல்லோரும்புகழுதற் குரியநல்ல சொற்களைக்கூறிக் கையாளும் புலவர்களுள் ஆண்சிங்கம் போலும் தலைமை பெற்றோனே! பெறுதற்கு அருமையான முறைமையினை உடைய பெருமைமிக்க முக்திச் செல்வத்தை வழங்கும் முருகனே! விரும்புவார்க்கு வேண்டியனவற்றை மிகுத்து அளித்து அவர் துய்க்குமாறு செய்யும் புகழ் மிகுதியும் கொண்ட பெரியோனே! பாதுகாவல் இல்லாமல் வருந்துவோர்க்கு அருள்

செய்யும், பொன்னுலாகிய அணிகளைப் பூண்டுள்ள செந்நிற மேனிபடைத்துள்ளபெருமானே!பகைவர்மேல்மீண்டும்போர்களை முடித்து, வென்று பகைவரைக் கொன்ற வலியமார்பினுல் பரிசிலர்களை அணைத்துக்காக்கும் அச்சத்தை விளைவிக்கும் புகழால் உயர்ந்த செவ்வேளே! தேவரும், முனிவரும், அந்தணர்களும் ஆகிய பெரியவர்களும் துதிக்கும் பெருமைமிக்க முருகன் என்னும் பெயரினை உடைய கடவுளே! சூரபன்மனது குலத்தையே அழித்த மிகுந்த தோள்வலிமையினை உடையவனே! போரிலே சிறந்து விளங்கும் வீரனே! தலைவனே! இவ்வாறு முருகனைப் புகழ்ந்து கூறுமாறு நக்கீரர் தாம் வழிப்படுத்தும் புலவர்க்கு அறிவுறுத்துகின்றார். ஈண்டு மூவகை அடியார்களைக் கூறுகின்றார். அவர்கள் நசையுநர் அலந்தோர் பரிசிலர் என்று அதில் நசையுநர் என்பவர் மோட்ச சாதனத்தையே விரும்புவர். யாதொரு பற்றும் அற்று அவனுடைய திருவடிப் பேறே வேண்டுமென்று ஆசைப்படுபவர் இவர்கள். இவர்களே திருவாவினன்குடிப் பகுதியில் "சீரைதைஇய உடுக்கையர்" என வரும் தொடரில் கூறப்படுவர். அலந்தோர் என்பவர்கள் துன்பம் வந்த காலத்து கடவுளிடம் தங்கள் துன்பம் தொலையப் பிரார்த்திப்பர். இவர்களை சந்தர்ப்ப பக்தர்கள் எனலாம். அடுத்தவர் பரிசிலர். பரிசை விரும்பி முருகனை வழிபடுபவர்கள். அருணகிரியாரும் "நினைத்த காரிய மநுகூலமே புரி பெருமாளே" என்று திருப்புகழில் கூறியிருக்கின்றார். இம்முப்பான்மையான பக்தர்களுக்கும் வேண்டியதை வேண்டியபடி அருளுபவன் என்று அவன் திறத்தைக் கூறுகின்றார் அவனை வேண்டி வருகின்றவர்கள், இடம்மூன்றில் ஒன்றாய்த்தான் இருக்கவேண்டு மென்றாயிற்று. முதலில் சொல்லப்பட்டவர்கள் உண்மைத் துறவிகள் பின்னுல்சொல்லப்பட்ட இருவர் இல்லறத்தை மேற்கொண்டவர்கள். ஆக வீடு வேண்டுமென்பாரும், இடர்களைய வேண்டுமென்பாரும் மாடுமனை பொருள், புகழ் வேண்டுமென்பாருமான முப்பான்மையாளர்க்கும் வேண்டியபடி அளிக்கும் வள்ளல். அவன் வீடு கொடுப்பதில் இசை பேராளனகவும், இடர்களைவதில் பொலம் பூட்சேஎய் ஆகவும், பரிசு வழங்குவதில் நெடுவேளாகவும் இருக்கின்றான்.

276-295 யான்அறி அளவையின் ஏத்தி ஆனது
நின்அளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனென்; நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய் எனக்
குறித்தது மொழியா அளவைக் குறித்துடன்
வேறுபல் உருவின் குறும்பல் கூனியர்
சாறு அயர் களத்து வீறுபெறத் தோன்றி
அனியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான் வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணம்கமழ் தெய்வத்து இனநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி, அறிவல்நின் வரவு என
அன்புடை நன்மொழி அளைஇ, விளிவின்று
இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி;

உரை விளக்கம்:-

முருகனின் புகழ் இவ்வளவில் அமையாது; ஆதலால் நீ அறிந்த அளவு இவ்வளவே என்று கூறிப் போற்றுவாயாக என்று உரைக்கின்றார். முருகனைத் துதித்தல் சிற்றறிவுக்கு அடங்காது. முருகனை அளந்து அறிதல் உலக உயிர்களுக்கு முடியாத செயல். ஆதலால் முருகனே நின்னடி நோக்கி வந்தேன் என்று கூறுவாயாக. நீ ஒப்புமை கூறமுடியாத அளவிற்கு இயற்கைஉணர்வும் பேரறிவும் உடையவன் என்று முருகனை நோக்கி நீ உரைப்பாயாக என்று புலவர்க்கு நக்கீரர் உபதேசிக்கின்றார். இவ்வாறு புலவர் சென்று,கருதினவற்றை முற்றுக் கூறுவதற்கு முன்பாகவே முருகனின் அருள்கிட்டும். என்று நக்கீரர் உறுதி கூறுகின்றார்.

புலவர் முருகனை நாடிச்சென்று புகழ்ந்து நிற்கும் அவ்வளவில், புலவர் வருகையை பல்வேறு உருவினுடைய முருகனின் ஏவலாளர் அறிந்து கொள்வர். முருகவிழா நடை

பெறும் களத்திலே சிறப்புறத் தோன்றி, இப்புலவன் அருள் பெறத் தக்கவன், அறிவுடைய பரிசிலன், முருகப்பெருமானே! உன்னுடைய வளமுடைய புகழை விரும்பிப்பாடி வந்திருக்கிறான், என்று முருகனிடம் ஏவலாளர் இனிமையான சொற்களையும் நல்லனவற்றையும் கூறித்துதித்துப் புலவரின் வரவை உணர்த்துவர். புலவர் வந்துள்ள தன்மையை உணர்ந்ததும் தெய்வத்தன்மை நிறைந்த வலிமை விளங்கும் திரு உருவத்தோடு வான்அளாவும் உயரத்தினையுடைய முருகன் வருவான் காண்பார்க்கு அச்சத்தைத்தரும் அந்த நெடிய உருவத்தை மறைத்து மணம் வீசும் தெய்வத் தன்மையோடு இளமையும் அழகும் உடைய உருவத்தோடு அவன் புலவரின் எதிரில் தோன்றுவான். "அன்பனே! அஞ்சாதே; உன்னுடைய வரவை நான் முன்பே அறிவேன்" என்று முருகன் அடைக்கலம் அளிக்கும் அன்புடையசொற்களை உரைப்பான். பின்னர் என்றும் அழிவில்லாமல் இருக்கும்படி இருண்ட கரிய நிறமுடைய கடலால் சூழப்பட்டுள்ள உலகில் நீ ஒப்பற்றவனாக விளங்கும்படி முருகன் செய்வான்; ஆதலால் முருகனை நாடிச் சென்று நீ பெறுதற்கரியபரிசிலை அவன் நல்கப் பெறுவாயாக" என்று நக்கீரர் உரைத்துப் புலவரை வழிப்படுத்துகின்றார்.

[தொடரும்]

THIRUVALLUVAR'S CONCEPTION OF EDUCATION

Prof. V. Perumal, M A., B T, M. R A. S
K. G. F FIRST GRADE COLLEGE
Oorgaum, Kolar Gold Fields (Karnataka)

The term "Education" which involves different shades of meaning was fully understood by the Tamils of yore. There are thousand and one definitions on education put forth by the intelligentia of different parts of the globe, belonging to different religions, different schools of thought and different tongues. Though every definition bears testimony to the individuality and originality of the sponsor, the underlying unity and resemblanee of thought among the definitions cannot be ignored. 'GREAT MEN THINK ALIKE' is a well-known proverb. Education may be defined as a life-long, systematic process which aims at harmonious development of all the faculties of the individual. To amplify the definition, Education is a methodical process, which trains the individual throughout his life and aims at the improvement of physical, mental social, moral and spiritual aspects of his personality. Thiruvalluvar, the erudite savant of TamilNadu, who flourished circa second century B C composed 1330 couplets known as 'Thirukkural'. As a matter of fact, the author has ably dealt with every subject under the sun in his immortal literary work par excellence. This period which witnessed many sided literary activity of a high order is known as the SANGAM AGE, which can be rightly said the

AUGUSTAN AGE in the history of Tamil Literature. His Kural which is encyclopaedic in range, is the quintessence of advanced thought.

He has given due importance to education and pedagogy and has allotted many chapters dealing with various aspects of the subject from different points of view. Besides, there are references to education here and there throughout his book throwing appreciable flood of light on the subjct.

Thiruvalluvar was the pioneer among the Tamils in the field of education and the later thinkers not only received inspiration from him but also followed his footsteps with heartfelt respect. By way of composing many couplets on education. Thiruvalluvar has rightly paved the way for the expansion and growth of educational thought. Hence, it will be a Solomonic Judgment on our part to style Thirukkural as, 'THE EDUCATIONAL CHARTER OF THE TAMILS'. In other words Thirukkural is the Tamilian Magnai Carta in general and in the field of education in part cular. Clarity of thought, brevity of diction, lucidity of language, simplicity in style, intelligibility of purport, dignity of expression and above all universality in out look characterise the educational charter propounded by the mighty brain.

FUNCTIONS OF KNOWLEDGE:

Knowledge has certain functions to perform. Mere accumulation of knowledge will not do any good to man if it does not function in the right way. The knowledge envisaged by Thiruvalluvar, has several aspects in its function. Every aspect has its own value in one's walk of life.

The first function of knowledge is philosophical in character To amplify this, knowledge should directly help its possessor in finding the reality. It is the function of knowledge not only to create in him a philosophical bent of mind but also to find out the truth in the long run Whatever may be the nature of an object or a thing, knowledge should function in the right direction to gain power to discover truth.

"Epporul Ethanmaithu aayinum apporal
Meipporal Kanpadhu arivu" (Thirukkural 335)

The second function of knowledge is directly related to the capacity of discrimination. One may hear so many things from a thousand and one persons belonging to different faiths, different races, different cultures, different tongues, different social and economic strata and different schools of thought The hearsay may or may not be true. The real knowledge consists in discriminating the right from the wrong and truth from falsity. Thus, the second function of knowledge has reasoning power as its back ground. One should have a cool head while reasoing.

"Epporul Yaaryaarvaai Ketpinum Apporul
Meipporul Kanpadhu arivu" (Thirukkural 423)

The third function of knowledge is to make a man co-exist among the various members of the socsety with 'We' feeling. Thiruvalluvar does not mean mere physical co-existence. In fact he signifies the harmonious co-existence of a high order. According to the author, one's knowledge should unerringly function to help one to lead a life of healthy co-existence. Thus, the function of knowledge from Thiruvalluvar's point of view has social values.

"Vulagam Thazheeyadhu Otpam Malardhalum
Koombalum Illathu Arivu" (Thirukkral 425)

The fourth function of knowledge involves moral and spiritual values. Knowledge is not only an intellectual asset but it should guide a person to lead the right type of life. Whenever a man violates the social, the legal and the moral code, his knowledge should come to his rescue and correct him and indicate the right mode of living. To put it in a nutshell, a man's intellect should have full control over his passion emotion, and desire. He should be guided by his head and not by his heart. So, it is crystal-clear that knowledge should serve as a torch and guide a man at every stage in his walk of life. The long and the short of it is that the acquisition of knowledge should give an impetus to the right mode of life.

"Senra Idathaal Selavidaa Theetho ee
Nanrinpaal Vuippathu Arivu" (Thirukkural 422)

Thus, the functions of knowledge as enunciated by Thiruvalluvar, are four-fold in range. Unless one's knowledge functions every where, it will become null and void and any amount of knowledge will prove to be no better than mere infor mation buraau.

THE ROLE OF PUBLIC SPEECH IN THE FIELD OF EDUCATION:

Public speech is an art; its many-sided importance, in the field of education is fully acknowledged by every man of letters. Thiruvalluvar deals with various features of public speech and its role in the educational field. The art of Public Speech is basically essential in the educational activities such as meetings, conferences, literary and similar associati-

ons, symposia, seminars, debates etc. Unless there is the gift of the gab in every member of the academic field, education will hardlv shine.

Thiruvalluvar considers the oratorical talent as a special accomplishmeut, chiefly in the field of education Such an accomplishment is not only one's individual asset but also contributes to the intellectual growth at large. Since language is the vehicle of thought, the proper and powerful employment of language is highly essential for the high lovely functions of education. To express one's thought precisely, intelligibly and powerfully one should possess a rich vocabulary at his command and a sound know ledge of technicality of public speech, besides keeping a civil tongue in his head. The usage of proper words in the proper manner at the proper context with mother wit will no doubt result in success in every intellectual activity: If these are absent, whatever is spoken will not only fall flat but also have adverse consequences.

The person who takes part in a discussion, symposium etc., should express himself in such a manner as it would go home to the audience. The content of speech and method of delivery should be in such a way as should arrest the attention of the audience and always remain green in their memory. Before delivering a lecture, one should master his subject thoroughly and keep the facts and figures at his finger tips.

It is his fundamental duty to study the psychology of his audience. The subject, style and diction should appeal to the audience. The vocabulary omp-

loyed should be apt and forceful. The mode of expression and nature of intonation must bee uphonically desirable and intellectually appealing. The speech should not be Marathon in length, as more often than not a lengthy speech proves to be gall and wormwood to the audience. The speech must always be short and sweet It is impossible to defeat those who have the gift of the gab, in any intellecutal combat. He who is unable to explain and illustrate his thought in an intelligible and appealing manner is like a blossomed-flower but without fragrance.

According to Thiruvalluvar, the academy where the educated intelligentia assemble and put their heads together, is the proper place for an orator to think aloud as well as to gain recognition It is no use of gaining recognition from the ignorant folk The educated scholars should always bear in mind that it is not a healthy attitude to cast pearls before swine. Seminars,discussions etc are not one way traffic. One should properly advance his thought in an apple-pie order in the house of intellectuals and at the same time learn from those who are academically superior to him. This is the secret of intellectual development.

Thiruvalluvar vividly explains the importance and the role of public speech in the field of education by citing an apt simile. What is the use of a shining sword in the hand of a chicken hearted fellow? Similarly, what is the use of one's knowledge what ever may be its breadth and depth, if he is timid to face an educated audience? Hence, it goes without saying that one's education will serve no purpose if one does not have the capacity to express oneself in

a learned assembly. Thiruvalluvar goes to the extent of saying that a highly educated man who fears to face the assembly of scholars is worse than an illiterate fool.

Though such a person is alive, to all intents and purposes he will be considered a block of wood. The sum and substance of Thiruvalluvar's pedagogical concept is that education has two factors viz, the acquiring of knowledge and expressing one self in a fitting manner. These two factors are equally important to attain perfection in knowledge and education. Thus the role of public speech in the field of education has great significance.

To conclude the contributions of Thiruvalluvar to education are very significant. Only a few points are covered in this paper.

உயர்மானுடம் – 8

உடலோம்பல் – தூய்மை

புலவர் ச. தனுக்கோடிஇராமசாமி பி. ஏ. அவர்கள்,
தமிழாசிரியர் ஆ. வை. உயர்நிலைப்பள்ளி,
சாத்தூர் 626203

(மலர் 27 இதழ் 3 175-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல வலிமையும் வளமும் நிறைந்த கல்லைக் கொண்டு தான் மானிடர் உள்ளங்களில் இன்ப ஊற்றெடுக்கச் செய்யும் சிலைகளை உருவாக்க முடியும். வலிமையற்ற சுக்கான்கல்லோ வளமற்ற செம்பாறையோ கலையழகு வழியும் சிலையை உரு வாக்கப் பயன்படாது. மானிடத்தின் உயர்வுகளையும் அழகு களையும் ஒரு மனிதனிடத்தில் உருவாக்க வேண்டுமானால் அம் மனிதனின் உடல் வளமானதாகவும் வலிமையானதாகவும் இருக்க வேண்டும். இதை விளக்கும் பழமொழிதான் 'சுவரை வைத்துத்தான் சித்திரம் வரையமுடியும்' என்பதாகும் எழில் மிக்க சிலையையோ சித்திரத்தையோ குப்பைமேட்டில் வைக்க முடியாது. தூய்மையான கோயிலில்தான் வைக்கவேண்டும். அப்படியே நலமுள்ள மனிதன் வாழ சுத்தமான சுற்றுப் புறம் வேண்டும்.

நாட்டு மக்களின் நலனில் அக்கரை கொண்ட பெரியவர் கள் எல்லோருமே நாட்டு மக்களின் உடல் நலத்தேவையை யும் சுற்றுப்புறத் தூய்மையையும் அதிகமாக வற்புறுத்தி வந் திருக்கிறார்கள். மகாத்துமா காந்தியடிகள் அவ்வப்பொழுது பல்வேறு இதழ்களில் உடல்நலனின் அவசியத்தையும்பேணும் முறையையும் எழுதி வந்துள்ளார்.

உடலோம்புதலை 1) தூய்மை 2) உணவு 3) பயிற்சி 4) மருந்து என்ற தலைப்புக்களில் பகுத்துப் பார்க்கலாம்.

தூய்மைதான் உடல் நலத்தின் ஆணிவேர். தூய்மை யாக இருப்பது என்பது எவருக்கும் எளிது. உடல்நலம்

அழிந்தொழிவதற்கு முதல்காரணம் தூய்மையில்லாதிருத்தலே யாகும். தூய்மையை அகத்தூய்மை புறத்தூய்மை என இரண்டு வகையில் நோக்கலாம்.

மனிதனுக்கு உணவைவிட இன்றியமையாதது நீராகும். நீரைவிட மிக இன்றியமையாதது காற்று ஆகும். இம்மூன்றிலும் தூய்மையைக் கடைப்பிடிப்பது அகத்தூய்மை என்று கொள்ளலாம். உடல், உடை, வீடு சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்வதைப் புறத்தூய்மை எனலாம்.

அகத்தூய்மை: காற்று: நாம் சுவாசிக்கும் காற்று நுரையீரலுக்குள் சென்று ரத்தத்தோடு கலக்கிறது. பிராணவாயு ரத்தத்துடன் கலந்து உடலிலுள்ள திசுக்களை வாழவைத்து வளர்க்கிறது. நாம் சுவாசிக்கும் காற்றில் போதிய அளவு பிராணவாயு இல்லை என்றால் நம் பிராணன் போய்விடும், ஆகவேதான் அதற்குப் பிராணவாயு என்று நம்முன்னோர்கள் பெயரிட்டுள்ளனர்.

சில திங்களுக்கு முன் வந்த செய்தி இது. கொடைக்கானில் ஓர் அறையில் மூவர் குளிருக்குப் பயந்து அறையிலுள்ள எல்லாச் சாளரங்களையும் நன்றாக மூடிப் படுத்துவிட்டார்கள், காலையில் பார்த்த பொழுது அம்மூவரும் இறந்து கிடந்தார்கள். சோதனையில் காற்று இன்மையே காரணம் என்பது தெரிய வந்தது. நம்மில் பலர் இரவுநேரங்களில் எல்லாச் சாளரங்களையும் மூடிக் கொள்ளுகிறார்கள். அது பெரிதும் தவறானது. எப்பொழுதும் காற்றுவர ஒரு சிறு சன்னலாவது திறந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பெரிய நகரங்களில் தெருக்கள் நெருக்கமாக உள்ளன. வீடுகளும் நெருக்கமாக உள்ளன. வீட்டுக்குள் வீடாக மக்கள் நெருக்கமாக வாழ்கிறார்கள். அத்தோடு பல்வேறு ஆலைகளின் நச்சுப் புகைகள், போக்குவரத்து வாகனங்கள் வெளியிடும் கரிப்புகையும், வாரிஇறைக்கும் தூசியும் காற்று மண்டலத்தை மிகவும் அசுத்தப்படுத்தி விடுகிறது. அப்படிப்பட்ட சூழலில் இருப்போர் ஓய்வுநேரங்களில் நகரைவிட்டு வெளியே மரஞ்செடி கொடிகள் உள்ள இடங்களுக்குச் சென்று உலவி

வருதல் நல்லது. மரஞ்செடி கொடிகள் மனிதர்களுக்குத் தேவையான பிராண வாயுவை வெளியிடுகின்றன. நச்சுக் காற்றை தாம் உட்கொள்ளுகின்றன. இது படைப்பின் அதிசயம்; அருள். வேப்ப மரநிழல் உடலுக்கு மிகவும் நல்லது. இதையே 'வீட்டடிக்கு வேம்படி நல்லது' என்ற பழமொழி விளக்கும். நுரையீரல் சம்மந்தமான நோயுள்ளவர்கள் கூட காற்றோட்டமுள்ள வேப்பமர நிழலில் தொடர்ந்து இருந்து வந்தால் நோய் குறையும் என்பர் பேரறிஞர் பெர்னுட்ஷா தான் நீண்டநாள் வாழவேண்டும் என்பதற்காக லண்டன் மாநகரிலிருந்து நீங்கி நாட்டுப் புறத்தில் வந்து நீண்ட ஆயுள் வாழ்ந்தார் என்பதை நாம் மறக்கக்கூடாது.

நீர்: மனிதர்களுக்கு வருகின்ற நோய்களில் பல நீரின் தூய்மையின்மையைப் பற்றுக்கோடாகக் கொண்டே வருகிறது. காலரா போன்ற நோய்கள் வரும்பொழுது மட்டும் நீரைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுகிறோம். இதைப் போலவே எல்லாக் காலங்களிலும் நீரைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவது நல்லது.

'தாயிற்பிழைத்தாலும் தண்ணீரில் பிழையாதே' என்பது தான் பழமொழி தாய்க்கு தவறு செய்து விட்டாலும் பன்னூற்றுக்கணக்கான மக்கள் பருகும் நீர் நிலையில் பிழை செய்யக்கூடாது என்பதுதான் பழமொழி. அதைவிடுத்து தாயைக் கழித்தாலும் தண்ணீரைக் கழிக்கக் கூடாது என்று இக்காலத்தில் பழமொழியை மாற்றி அசுத்த நீரையும் பருகி வருவது வேதனையளிக்கிறது. சில கிராமங்களில் ஒரே குளத்தில் ஆடு மாடுகள் குளிப்பதும், அதே நீரை, மனிதர்கள் குடிக்கவும் செய்கிறார்கள். அதனால் சொறி, நரம்புச் சிலந்தி, தொழு நோய் போன்ற நோய்கள் உண்டாகின்றன.

உணவு: 'நாம் உணவில் சுத்தம் பேணுகிறோம்' என்று எண்ணிக் கொண்டுள்ள பலரும்கூட உணவில் உண்மையான சுத்தத்தைப் பேணுவதில்லை. கடைகளிலிருந்து வாங்கிவரும் காய்கறி பழங்கள் மீது எவ்வளவோ அசுத்தம் உள்ளது. ஆனால் பழங்களை அப்படியே உண்ணத் தொடங்கி விடுகின்ற

னர். தெருப் புழுதியோடு நுண் கிருமிகள் எவ்வளவோ அதன் மீது ஒட்டிக்கொண்டேயிருக்கும். எனவே பழங்களைத் துடைத்துவிட்டால் மட்டும்போதாது. நன்றாகக்கழுவவேண்டும். பழங்களைச் சவரம் செய்தபிளேடு, அல்லது துருப்பிடித்த கத்தி கொண்டு அறுத்து உண்ணுதல் அறுவெறுக்கத் தக்கது. காய்கறிகளை நன்கு நீரில் அலசிய பின்பே அறிந்து சமைக்க வேண்டும். சிலர் குறைந்த விலைக்கு கிடைக்கிறது என்பதனால் சற்றுஅழுகிய காய்கறிகள் பழங்களையே வாங்கி உண்ணுகிறார்கள் இதை அவர்களின் ஆரோக்கிய மாளிகை மீது விழும் பேரிடி என்றுதான் கொள்ளவேண்டும்.

புறத்தூய்மை: உடல் தூய்மை: கண்: உடலைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுவதில் ஆரோக்கியம் மட்டுமல்லாது, இதமான மகிழ்வும் இருக்கிறது காலையில் எழுந்தவுடன் குளிர்ந்த நீரில் கண்ணைக் கழுவ வேண்டும். இது கண்ணின் நீண்ட வாழ்க்கைக்கு மிகவும் தேவையானது. பேரறிஞர் பெர்னட்ஷா தன்னுடைய 96 வயது வரை மங்காத பார்வையுடையவராக இருந்தமைக்குக் காரணம் தினமும் காலையில் எழுந்தவுடன் கண்ணைக் கழுவி வந்ததே காரணம் என்று கூறியுள்ளார்.

மூக்கு: மூக்கை சுத்தமாக வைத்துக்கொள்ள நீரை ஒரு மூக்குத்துவாரத்தை அடைத்துக்கொண்டு மற்றொரு மூக்குத் துவாரத்தின் வழியாக உறிஞ்சி மீண்டும் மற்றொரு துவாரத்தின் வழியாக விடவேண்டும், அல்லது வாய் வழியாக வெளியேற்றவேண்டும் என்று மகாத்துமா காந்தியடிகளும் விவேகானந்தரும் கூறியுள்ளார்கள்.[1]

பல்: பற்கள் மனிதர்களுக்கு இறுதிவரைப் பயன்படவேண்டியவை. அத்தோடு மனிதர்களுக்கு எடுப்பான தோற்றத்தை அளித்து சரியான மொழி உச்சரிப்பிற்கும் உதவிக் கொண்டிருப்பவை. அவற்றில் வெற்றிலை பாக்கு போட்டு காவி ஏற்றுவதோ புகை பிடித்துக் கருமையடையச் செய்வதோ அருவெறுக்கத்தக்கன, சிலர் புகையிலையைச் சதா

ஒதுக்கி புற்று நோய்க்கு ஆளாவோரும்; பற்களில் மூக்குப் பொடியைத் தேய்ப் போரும் இல்லாமல் இல்லை

செங்கல், மண், மணல், அடுப்பிலுள்ள மண்ணும், கல்லும் கலந்த சாம்பல் இவற்றைக்கொண்டு மக்கள் பல்த்தேய்ப்பதை இன்றையக் கல்வி காரணமாகச் சிலர் விட்டிருப்பினும் பலர் பின் பற்றியே வருகிறார்கள் ஆயுர்வேத மருத்துவ முறைப்படி நாயுருவிச்செடியின் வேரைப் பல்துலக்கப் பயன் படுத்துவதே மிகவும் நல்லது. பல்லும், ஈறும் சுத்தமடைந்து வலிமையடையும் அத்தோடு பல்லில் முத்தின் ஒளிபோன்ற ஒரு ஒளி ஏற்படும். கருவேலங்குச்சி ஆலவிழுது இவற்றை பயன்படுத்தலாம். நல்ல பேஸ்ட்பிரஷ் கொண்டு துலக்கலாம் சூடான நீரில் வாய் கொப்பளித்தல் கூடாது. பல்லின் மேல்ப் புறத்திலுள்ள எனமல் என்ற பகுதி சூட்டைத் தாங்காது கெட்டுவிடும் குளிர்ந்தநீர் அல்லது ஐஸ் ஆகியவற்றை அடிக்கடி பயன்படுத்தினால் பல்வேர் விரைவில்உயிரிழந்து பல் கீழே விழுந்துவிடும்.

தலைமயிர், காது, கை, கால் விரல் இடைகள், சதை நக இடைவெளி, அக்குள்கள், கால்சந்து, ஜனந்திர உறுப்பின் வெளி உட்புறங்கள், கால்ப்பாதங்கள், ஆகிய எல்லா இடங்களையும் நீரினால் நன்கு தூய்மைப் படுத்தவேண்டும். கரம்பை மண்ணைக் குழைத்து உடலெங்கும் தேய்த்துக் குளித்தால் உடல் தூய்மையடைவதோடு தலைமயிர் பஞ்சாக மென்மையடையும்: தோல் நன்கு வளமாகக் காட்சியளிக்கும். எலுமிச்சம் பழச்சாறு அல்லது பாசிப்பாற்றுமாவு ஆகியவற்றை உடலில் பூசிக் குளித்தால் உடல் தூய்மையடைந்து மெல்லிய நறுமணத்தோடு ஒளியோடும் திகழும். அத்தோடு எலுமிச்சம் பழச்சாறு உடலின் சொறி,பரு போன்றவற்றை நீக்கும் தினமும் சூரிய ஒளியில் தோய்தல் அவசியம். மேலை நாட்டவர் வெயில் குளிப்பு (Sun bath) என்று தினமும் கொஞ்சநேரம் வெயிலில் திரிகிறார்கள். வெயிலில் தோய்ந்து பழகிய உடம்பால்த்தான் குளிரைத் தாங்கமுடியும். மழை நீரில் நனைந்து இன்புற விரும்புவோர் வெயிலில் காய்ந்தவராக இருக்கவேண்டும் என்கிறார் தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள்[2].

ஆடை: இன்று மனிதர்கள் ஆடம்பரத்தைப் பேணும் அளவிற்கு ஆரோக்கியத்தை மறந்து வருகிறார்கள். நம் நாட்டின் வெப்ப நிலைக்கு காற்றோட்டமும், வேர்வையை உறிஞ்சும் குணமும், வெப்பத்தை தாங்கக் கூடியதுமான பருத்தி ஆடைகளே மிகவும் நல்லது. பல்வேறு ரசாயனப் பொருட்களால் உருவாக்கப்படும் டெர்லான், டெரிலின், டெரின் போன்ற செயற்கைத் துணிகள் நம் நாட்டின் வெப்பநிலைக்கு ஏற்றதன்று, அழகிற்காக அல்லது சிக்கனத்திற்காக அணிவது என்றால்கூட அவற்றை ஆறு அல்லது எட்டுமணி நேரத்திற்கு மேல் அணியக் கூடாது. தினமும் நீரில் தோய்த்து சுத்தப்படுத்தப்பட்ட ஆடைகளை அணிவதுநல்லது. பனியன் அண்டர்வேர் போன்ற உள்ளாடைகளை சட்டாயமாக நீரில் தோய்த்துத் தூய்மைப்படுத்தியே அணியவேண்டும்.

> "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
> வாய்மையால் காணப்படும்"

என்ற வள்ளுவர் வாக்கை மறக்கக் கூடாது.

வீடு, சுற்றுப் புறத் தூய்மை: 'As a race Indians are dirty' (அழுக்குப் போட்டியில் இந்தியர்கள் முதலிடம் பெறுகிறார்கள்) என்று மேற்கு நாடுகளில் ஒரு பழமொழி வழங்குவதாக திருமதி காந்தமதி என்ற கல்வி அதிகாரி அவர்கள் தலைமை ஆசிரியர்கள் கூட்டமொன்றில் வேதனையோடு கூறினார்கள் பிரான்சு நாட்டினர் அழகுக் கலையிலும், ஆங்கிலேயர் அரசியல் சூழ்ச்சியிலும், சப்பானியர் உழைப்பிலும் முன்னணியில்நிற்க நாம் சோம்பலிலும் அழுக்கிலுமா முன்நிற்பது?

வீடு வாசல்களை தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும். பொருட்களை உரியஇடங்களில் அழகாக வைத்திருத்தல் வேண்டும். பாச்சால், பல்லி, கரப்பான் பூச்சிகள், மூட்டைகள் ஓடி விளையாடும் விளையாட்டு அரங்கமாக வீட்டுச் சுவர்கள் இருத்தல் கூடாது. ஒட்டடைகள், புகை பிடித்து; பொருட்கள் கண்ட விடங்களில் சிதறி, குப்பையும் கூளமாக வீடு சுடுகாடாகக் காட்சியளிக்கக்கூடாது. கழிவுநீர் சிந்துமிடங்களில் கழிவுநீர் தேங்கக்கூடாது. உரல், அம்மி பக்கங்

களில் மாவு, அரசல் சிந்தி அழுகவிடக்கூடாது. வீட்டை ஒட்டடை அடித்து,வண்ணங்கள்பூசி வீடு பளிச்சென இருக்க வேண்டும். பொருட்களை எல்லாம் ஒழுங்காக அழகுற அமைத்து வீடு கலைக்கோயிலாகத் திகழ வேண்டும். மேலை நாட்டவர் கக்கூசை மிகத் தூய்மையாக வைத்துக் கொள்ளுகிறார்களாம். நாமும் அப்படி பிறையில் பயன்படுத்தி தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் வீட்டை வாரம் ஒரு முறை டெட்டால் கலந்த நீரால் கழுவிவிட வேண்டும். மண் தரை வீடாக இருந்தால் வீடுமுழுக்க பசுசாணத்தால் மெழுக வேண்டும். கக்கூசை நாமே தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். அதில் உயர்ந்த மானுடம் உள்ளது.

நகர, கிராமத்தெருக்கள், பேருந்து புகைவண்டி நிலையங்கள், திரையரங்குகள், சத்திரங்கள் இவற்றின் அசுத்த மெல்லாம் நம்மவரின் சோம்பல், பொறுப்பின்மை, அசட்டுத்தனம் நாட்டுப்பற்றின்மை,இவற்றிற்குசாட்சிகூறிக்கொண்டுள்ளன.

இந்தநாடு தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ள,பொறுப்புள்ள சகோதரர்களையும், சகோதரிகளையும் எதிர்பார்த்துக் கொண்டுள்ளது. சகோதரர்களும் சகோதரிகளும் தாங்கள் பொது விடங்களை தூய்மையாக வைத்துக் கொள்வதோடல்லாது மற்றவரையும் அப்படியே நடக்க வற்புறுத்தவேண்டும் அதற்கு பரிசோ தண்டனையோ எது கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளவேண்டும். 'அப்பர்' என்று அன்பொழுக அழைக்கப்படும் நாவுக்கரசுப்பெருமான் இத்தொண்டில் திளைத்ததை தங்கள் முன் மாதிரியாகக் கொள்ளவேண்டும் தூய்மையைக் கடைப்பிடிப்பதில் உடல் நலனும் மனமகிழ்வும் சமூகத்தில் மதிப்பும் ஏற்படுகிறது, நாடும் நலம்பெறும்.

(தொடரும்)

---

1. மகாத்துமா காந்தி ஆரோக்கியத்தின் திறவுகோல் பக்கம் 23.
   விவேகானந்தர் — ராஜயோகம்.
2. கி. ஆ. பெ. விசவநாதம் — அறிவுக்கு உணவு.

231

பெரியபுராணப் பாயிரம்

சைவபுராணிகர் M. சுப்பராய முதலி அவர்கள்,
பாகசாலை, (செங்கற்பட்டு மாவட்டம்)

வாழ்த்து (உரைக்கொத்து)

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பொருள் வெளிப்படை: எல்லா உலகத்தினரும் நினைக்கவும் உரைக்கவும் கூடாத பேராற்றலும் பேரருளும் உடையவன். இன்னும் நிலவைச் சடையில் வைத்து உலகத்தில் உலாவவைத்தவன். நீர் நிறைந்த சடைமுடியையுடையவன். பெருஞ்சோதியாக உள்ளவன் அம்பலத்தில்-பொன்னம்பலத்தில் ஆடுகின்றவனாகிய நடராசப் பெருமானுடைய மலர் போன்ற சிலம்பணிந்த திருவடிகளை வணங்குவாம் என்பதாம். பொன்னம்பலம்—அழகான அம்பலம். அழகு என்றால் ஞானம் ஞான அம்பலம்.

உட்குறிப்புரை: சிவபெருமானுக்கு உள்ள வடிவங்கள் மூன்று. இந்த மூன்று வடிவங்களும் இந்தவொரு திருப்பாடலில் வைத்தோதினார் ஆசிரியர். அதாவது அருவம், அருவுருவம், உருவம், முதல்சீர் அருவம், இரண்டாவது சீர் உருவம். அலகில் சோதி என்பது ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியாகிய அருவுருவம். மற்றது உருவங்களேயாம்.

[வாழ்த்துவதும் வணங்குவதும் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினால் தொழவேண்டுமென்பதைக் குறிக்கின்றது மனம் தூண்டின பிறகே வாழ்த்தவும் வணங்கவும் உண்டாயின என்பது குறிப்பு.

[உலகெலாம். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்றதனால் பெரியோர்களுக்கும் உணரவும் உரைக்கவும் அரியவன் என்பதுங் குறிப்பு.]

[நினைக்கவும் உரைக்கவும் அருமையாக உள்ளதாயின் நாங்கள் என்ன செய்வதென்று என்போன்றவர்களுக்கு ஐயம் நிகழலாம். நம் சமயகுரவர்களுக்கு அப்படி இல்லை 'ஆராலுங் காண்டற்கரியான் எமக்கெளியன்' என்றார் மாணிக்கவாசகர்

''காண்டற்கரிய கடவுள் கண்டாய்
கருது வார்க்காற்ற எளியான் கண்டாய்''

''வெள்ள நீர்ச் சடையர் போலும்
விரும்பு வார்க்கெளியர் போலும்''

என்றார் அப்பர்.

''இன்னதன்மையனென்றறியொண்ணா எம்மானை எளிவந்தபிரானை''

என்றார் சுந்தரர்.

[சுட்டிக் காட்டக்கூடாத இறைவனை பெம்மான் இவன் என்று தமது திருக்கை விரலால் சுட்டிக்காட்டினார் சம்பந்தர் ஆதலால் இந்தப் பெரு மக்களுடைய திருவாக்குக்களைக் கொண்டு உய்யலாம் நாமெல்லா மென்பது குறிப்பு.]

[''உலகெலாம் என்ற பதத்தின் எழுத்துக்களை எண்ணிப் பார்த்தால் ஐந்தெழுத்துக்களே இருக்கின்றன. ஆதலால் பல் லக விளக்கது பலருங்காண்பதென்ற திருவாக்கின்படி உலக மெல்லாவற்றையும் உய்விப்பது திரு ஐந்தெழுத்தே என்பது குறிப்பு.]

[''நிலவுலாவிய நீர்மலிவேணியன்'' நீர் நிறைந்த சடையில் நிலவு நிலவி இருக்கின்றது. நீர் அலைந்தபடியே இருக்கும். நிலவின் தோற்றம் நீரில் உலாவுவதாக இருக்கின்ற தென்பதுங் குறிப்பு. 'நீருலாவிய சென்னியன்' என்றார் திருஞானசம்பந்தர்.

[''அலகில் சோதி'' விட்டுணுவும் அக்கினிப் பிழம்பைக் கீழும் மேலுமாகத் தேடியது இது.

''அடிமுடி காண்பான் அயன்மா லிருவர்
படிகண்டிலர் மீண்டும் பார்மிசை கூடி
அடிகண்டிலே னென்று அச்சுதன் சொல்ல
முடிகண்டே னென்றயன் பொய் மொழிந்தானே''

என்பது திருமந்திரம்.

[''மலர்சிலம்பு'' வாய் மலர்சிலம்பு வேதங்களே நடராசப் பெருமானுடைய திருவடிகளுக்குச் சிலம்பாக அமைந்து வாய் மலர்ந்து முழுமுதற்கடவுள் எங்கள் சிவபெருமானேயன்றி இன்னும் யாரும் இல்லை என்றரற்றுவதாம் என்பது குறிப்பு. சிலம்பு என்றாலே சப்திக்கும் என்பதுபொருள். சிலம்பணிந்த சேவடிகளை வாழ்த்தி வணங்குவாம். மற்ற அங்கங்களையல்ல. ஏனென்றால்அதனால் வரும்பயன்களையே நாம்தாங்கமாட்டோ மென்பதுங் குறிப்பு.

[வணங்கினேனென்று சொல்லாமல் வணங்குவா மென்றார் ஆசிரியர். அதாவது தம்மையும் இதைப்படிக்கின்றவர் களையும், இதைச் செற்பொழிவாற்றுவோரையும், விரும்பிக் கேட்போரையும் உடன்படுத்திக் கூறியதாம்.]

'அம்பலம்' என்பதற்குத் தில்லையம்பலம் என்றார்கள் பல புலவர்கள். சேக்கிழார் அவ்வாறு கூறவில்லை. இந்தப்பாட்டு ஊரைக் குறிக்காதது அம்பலம் என்றால் வெளி-பரவெளி-ஞானகாசம், இதைத்தான் தாயுமான சுவாமிகளுங் கூறுகின்றார். ''கங்குல் பகலற நின்ற எல்லையுளதெது அது கருத்திற் கிசைந்ததுவே'' இரவு பகலற்ற இடம். ''சூரியர்கள் சந்திரர்கள் தோன்றாச் சுயஞ்சோதி பூரணமாந்தேயத்திற் பொருந்து நாளெந்நாளோ'' அந்தரத்தே நின்றாடும் ஆனந்தக் கூத்தனுக்கென் சிந்தை நிறை கொடுத்துச் சேவிப்பதெந்நாளோ. என்பதனாலறியலாம். மேலுலகங்களெத் தனையுண்டோ அத் தனையுங்கடந்துள்ளது பரவெளி, திருநாவுக்கரசரைக் கொடுங் கோலரசன் கற்றூணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினான், அந்தச்சமயம் திருவதிகை, திருப்பாதிரிப்புலியூர், பெரும்பற்றப்புலியூர் எதையுமே குறிக்காமல் ''சொற்றுணைவேதியன் சோதி வானவன்' என்றார். தாயுமான சுவாமிகள் அருளிய அம்பலத்தைத்தான் குறிக்கின்றது என்பது குறிப்பு.

இன்னும் தொண்டை மண்டல சதகத்தில்

''விண்ணிற் பிறக்கும் புகழ்க்குறை நாடன் விளங்கு தமிழ்ப்
பண்ணிற் பிறக்கும் பெரியபுராணம் பகர்ந்தபிரான்
எண்ணிற் பிறக்கும் பததூளி என்தலை எய்தவந்த — அந்த
மண்ணிற்பிறக்கவும்வைக்குங்கொலோ தொண்டைமண்டலமே''

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

அலங்கார நாயகன் 20

திருமதி ஆர். பார்வதிஅம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை, நாமக்கல்.

துணையாக வரும் வேலன்

அருணகிரிநாதர் நெஞ்சத்தைப் பார்த்து சொல்லுகிறார். ஒரு பூதர்க்கும் தெரியாத இடம், இரவும்பகலும் அற்ற அருள் வெளியான இடம், அங்குச்செல்ல நமக்குத் துணை வேண்டும். ஆயுதம் கையில்உடையவன் துணையாகவரவேண்டும். பெரிய அரக்கர்களையெல்லாம் சங்காரம் செய்து வாகைசூடிக் கொண்டிருக்கும் தேவ சேனாதிபதியாகிய முருகனுடைய துணையைப் பெற்றுச் சென்றால் அருள்வெளியை எளிதில் அடையலாம். சூரபன்மன் முதலிய அரக்கர்களைச் சங்காரம் செய்தவேல் அவன் கையில் உள்ளது. ஆறுமுக வள்ளல் அறிவு நூல்களாகிய வேதங்களாலும், ஆகமங்களாலும் பரவப்பெற்ற திருவடியையுடையவர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்றார் படிக்காசுப் புலவர். விண்ணென்பது முன் சொன்னதேயாம். ஆனால் அது சென்னை வானொலி நிலையம் போன்றது. தில்லையம்பலம் நமது வீடுகளில்வைத்துள்ள ரேடியோ பெட்டியைப் போன்றது. அதனால்தான் இரண்டாவது திருப்பாட்டும் நடராசப் பெருமானையே குறித்துப் யாடியருளினர். "தொடுத்த மலரொடு தூபமும் சாந்துங் கொண்டெப்பொழுதும் அடுத்துவணங்கும் அயனொடு மாலுக்கும் காண்பரியான்" என்றார் திருநாவுக்கரசர். 'அப்பாலுக்கப்பாலைப் பாடுதுங்காணம்மானாய்'' என்றார் மாணிக்கவாசகர் அதனாலன்றோ தில்லையம்பலத்தை ஆகாசத்தலமென்றார்கள் பெரியோர்கள். சேக்கிழார் பெருமான் தொழுதது தில்லையம்பலத்திலுள்ள நடராசப் பெருமானை. அவருக்குக் கிடைத்த திருவாக்கு

> "வெருளில் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய
> பொருளின் ஆகுமெனப் புகல்வாமன்றே"

என்பதனாலுந் தெரியலாம். திருச்சிற்றம்பலம் என்பதும் சிதம்பரம் என்பதும் ஞானகாசமேயாம் என்பராம்,

"ஆலமுண்ட கோளகண்ட லோகமுண்ட மால்விரிஞ்சன்
ஆரணங்க ளாகமங்கள் புகழ் நாளும்" திருப்புகழ்.

நமக்குக் கிடைக்கும் ஞானம், வேதமாக வருகிறது ஆக மங்களாக வருகின்றன. எம்பெருமான் திருக்கரத்திலுள்ள வேலை ஞானவேல் என்று சான்ருேர்கள் கூறுகின்றனர். அருணகிரிநாதர் அந்த ஞானத்திற்கு உருவம் கொடுத்து ஞானம்தரும் நூலாகியவேதத்தையும், ஆகமத்தையும் எண்ணி அந்த வேல் வேதவேல், ஆகமவேல் என்று சொல்கிருர். இறைவனேடு தொடர்புடைய எல்லாவற்றையும் வேதம் என்று சொல்வது சான்ருேரின் பண்பாடு, சிவபெருமான் ஏறிச் செல்லும் இடபம் வேதம், அவன் அணிகின்ற ஆடை வேதம், அவன் சிலம்பு வேதம் எனச் சிவாகமங்கள் கூறுகின் றன. முருகனுடைய கையிலுள்ளவேல் வேதாகம சித்ரவேல் என்று அருணகிரியார் கூறுகிருர்

வேல்நமக்குத் துணையாக வரவேண்டுமென்ருல்அந்தவேலை உடைய வேலாயுதன் தாளை நாம் பற்றிக்கொள்ளவேண்டும்.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

என்று தெய்வப்புலவர் வள்ளுவர் பேசுகிருர். நம் மனக்கவலை போக வேண்டுமானுல் அவன் காலைப் பற்ற வேண்டும், அவன் காலைப் பற்றினுல் வேலை விடுத்து நம்மைக் காப்பான். காலைப் பிடிக்கும் அன்பர்களுக்குப் பயன்படுவதற்காகவே அவன் வேதாகம சித்ர வேலாயுதத்தை வைத்திருக்கிருன்

நெடுங்காலமாகவே அன்பர்கள் எப்போதும் மலர்தூவி வழிபட்டு வந்த திருத்தாள்கள் அவை. அவர்கள் தூவிய மலர்கள் அவனது திருத்தாள்களில் அன்றலர்ந்த மலர்களைப் போல மணம் வீசிக் கொண்டு குவிந்துள்ளது அவ்வளவு தன்மை உடையது அவனது திருத்தாள் வெட்சி மலர் வேற் பெருமானுக்குகந்த மலர்களில் ஒன்று அதனைப் பின்வரும் சான்றுகளால் அறியலாம்.

"செங்கால் வெட்சிச் சீறித ழிடை யிருபு" திருமுருகாற்றுப்படை
"வெட்சி மலர் சூழ்ந்த நின்னிரு கழற்கால்" கல்லாடம்
"வெட்சித் தண்டக் காலென்கிலே" அலங்காரம்

அந்த வெட்சி மலரை அணிந்த திருத்தாளில் தண்டையும் அணிந்திருக்கிறன், இறைவன் வருகிறன் வருகிறன் என்று மெய்யன்பர்களுக்கு அது ஒலி செய்து காட்டுகிறது. ஆதலால் அப்பரமபதியின் பாதகமலமே ஆன்மகோடிகட்குத் தஞ்சம் புகத்தக்கதாம். வேலனடியார்களுக்குக் காலபயம் கிடையாது. அவனது திருவடியைப் பற்றிக்கொண்டு நீயே சரணம் எனக்கண்ணீர் விட்டுக் கதறினல் அவன் கை அஞ்சல் என்று சொல்லும். அல்லும், பகலும் என்பது மறப்பு, நினைப்பு.

"கங்குல் பகலற நின்ற எல்லையுளதெது" — தாயுமானவர்

"இராப் பகலற்ற இடத்தே இருக்கை எளிதல்லவோ" — அலங்காரம்

"அந்தி பகலற்ற இடம்" — திருப்புகழ்

ஒருவருக்கும் தெரியாமல் யாரும் காணமுடியாத நிலைமையில் அல்லும் பகலும் அற்ற வெளியாக இருக்கிற சூது அற்ற நிலைக்குப் போதாய் என்று சொல்கிறர். சும்மா இருப்பது என்ன? செயல்அடங்கி, பேச்சுஅடங்கி, மனம்அடங்கி இருப்பதையே சும்மா இருத்தல்என்பர். காடும்கரையும் கால்விட்டு ஓடும் மனக்குரங்கே உலக விஷயத்தினின்றும் நீங்கிச் சொல்லற சும்மா இருக்க வருவாயாக, சும்மா இருத்தலாலேயே சுகம் பெறலாம். அது ஆறுமுக வேலே உபதேசித்ததாம்.

"சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே" — அனுபூதி

இந்தநிலையைக் காட்டுமாறு சிதம்பர சுவாமிகள் செவ்வேளை வேண்டி நிற்கின்றர்.

"சும்மா இருவெனநீ சொல்லப் பொருளொன்றும்
அம்மா அறிந்திலமென் றன்றுரைத்த — எம்மான்
அருணகிரிநாதர் அநுபவம் நாயேற்குக்
கருணைபுரி பேருரா காட்டு"

சும்மா இருக்கும் அகத்தைப் பெற ஒவ்வொருவரும் விரைந்துமுயற்சிக்கவேண்டும். பெருமானிடம் விண்ணப்பிக்க வேண்டும். அதனைப் பெற வேண்டுமென்ற வேகமும் தாகமும் இருக்கவேண்டும். இராமலிங்க அடிகள் திருவாய் மலர்ந்ததை உன்னுவோமாக.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

முத்தும் - முத்தமும் (4)

திருமதி, ப. உமாதேவி அவர்கள்,
9/49 திரௌபதியம்மன் கோயில் தெரு
அரியாங்குப்பம்—புதுவை-7

புலவரின் சூளுரை ஓரளவு அவர் எதிர்பார்த்த பலனைத் தருகின்றது. தன்னுடைய அடியவரின், அதுவும் தமிழ்ப் புலமை வாய்தவரின் மனதை இன்னும் சோதனை செய்து நோக விடுவது தவறு என்பதாலோ அல்லது அவருடைய உறுதியான பக்தியின் வழியே எழுந்த ஆணுரையைக் கேட்டதாலோ என்னவோ. செந்திற்குமரன் தன் சேவடிகளில் பொருத்தப் பெற்றுள்ள கிண்கிணியும், சிலம்பும், சதங்கையும், இனிய ஒலியெழுப்ப எழிலானச் சிற்றடிகளை மெல்ல எடுத்து வைத்துத் தளர் நடையிட்டு வருகின்றான். அவனது

(முன் பக்கத் தொடர்ச்சி)

"இன்றுவரு மோநாளைக் கேவருமோ அல்லதுமற்
றென்றுவரு மோ அறியேன் எங்கோவே — துன்றுமல
வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம்"

மதயானையை வசமாக்குதலும், கரடி வெம்புரி வாயைக் கட்டுதலும், சிங்கத்தின் முதுகின்மேல் ஊர்தலும் அரவினை ஆட்டுதலும் பஞ்சலோகத்தை வேதித்தலும், ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் இருத்தலும், தேவரை ஏவல்கொள்ளுதலும், இளமையோடு எந்நாளும் இருத்தலும், கூடுவிட்டுக் கூடுபாய்தலும் நீர் மேல் நடத்தலும், நெருப்பின் மேல் நிற்றலும் ஒப்பற்ற சித்தி பெறுதலும் ஆகிய செயல்கள் எல்லாம் எளிமையான செயல்களே ஆகும் சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கின்ற திறம் ஒன்றே அரிதுஅரிது என்றார் நம் தாயுமான அடிகள் மனமே வா சும்மா இருக்கலாம் என்று அருணகிரியார் தம் மனத்தைப் பார்த்துச் சொன்னதுதான் இது. தமக்காக மட்டும் அல்ல நமக்காகவும் இதைச் சொல்கிறார்,

"வேதா கமசித்ர வேலா யுதன் வெட்சி பூதத்தண்டைப்
பாதார விந்தம் அரணுகச் அல்லும் பகலும் இல்லாச்
சூதானது அற்ற வெளிக்கே ஒளித்துச்சும் மாஇருக்கப்
போதாய் இனிமன மேதெரி யாதுஒரு பூதர்க்குமே"

வரவு கண்டு புலவரின் மனம் விம்மித மடைகின்றது. அளவற்ற அன்பும் ஆனந்தமும் ஒருங்கே குடி கொள்ள, அவன் அடியெடுத்து வைக்க ஆரம்பித்ததுமே தன்னிரு கைகளையும் நீட்டி இன்சொற்களால் வரவேற்க ஆரம்பித்து விடுகின்றார்.

உடலில் வரிகளும், வலிமையும் கொண்ட ஆண்வாளை மீனானது வயலில் ஒலியுடன் எழும்பிக் குதிக்க, அதன் வேகமும், உடலின் கனமும் தாங்காத நெற்பயிர்களின் தாட்கள் வளைந்து, பின்னர் முற்றி விளைந்த நெற்கதிர்களைச் சுமந்தனவாய் அவற்றின் பாரம் தாங்காமல் சாய்ந்து ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு காட்சியளிக்கும். அவ்வாறு பக்குவப்பட்ட கதிர்களைக் கொண்டு சாய்ந்திருக்கும் நெற்பயிரை. சேரியில் இருக்கும், வலிய, கருமையான. கைகளைக் கொண்ட பள்ளர்கள் தங்கள் கதிர் அரிவாளை நன்றாகத் தீட்டிக் கொண்டு வந்து அறுத்தெடுத்துக் கொண்டு போய் விற்பர். அந்த நெற்கதிர்களுக்கு விலையாகப் பெற்ற குளிர்ந்த முத்துக்களைத் தங்களுடைய சிறு குடிசைக்குக் கொண்டுபோய் முன்பே தங்களால் சேர்த்து வைக்கப்பட்ட முத்துக் குவியலுடன் இதனையும் ஒருச் சேர குவித்து வைப்பர் அது மட்டுமன்றி குவளை மலர்கள் நிறைந்துள்ள நீர்நிரம்பியக் குழிகளில் உள்ளதும், வெண்மையான உடலின் மேல் வரிகளைப் பெற்றதுமான சங்கினங்கள் ஈற்றால் வருந்தி, மிக்கத் துன்பத்துடன் நீர்ப்பரப்பினை விடுத்து மணல் மேட்டில் ஏறி, வெண்மையான பெரிய, பெரிய பரு முத்துக்களை ஈன்று விட்டுச் செல்ல, அம்முத்துக்களைக் கண்ட பெண் அன்னமானது தன் முட்டையென்றுயெண்ணி வாரித்தன்னிடத்தேக் குவித்துக் கொள்ளும். கடையரான பள்ளர் மட்டுமின்றி பகுத்தறிவற்ற அன்னப்பறவைக்கும் கூட நிறைந்த அளவு முத்துக்களை வாரிக் கொடுக்கும் திருச்செந்தூர்ப் பதியில் கோயில் கொண்ட தலைவனான வடிவேல் முருகனே வருக! வள்ளிக் கணவனே வருக! என்று வரவேற்கின்றார்.

முரிப் பகட்டு வரிவாளை
முழங்கிக் குதிக்கக் கால்சாய்ந்து
முதிர விளைந்து சடைபின்னி
முடங்கும் பசுங்காய்க் குலைச்செந்நெல்

சேரிக் கருங்கை மள்ளர்குயந்
தீட்டி அரிந்த கொத்தினுக்குத்
தெண் முத் தளப்பச் சிறுகுடிலிற்
சேரக் கொடுபோய் அவர்குவிப்ப
வேரிக் குவளைக் குழியில் வரி
வெண்சங் கினங்கள் ஈற்றுளைந்து
மேட்டில் உகுத்த பருமுத்தை
வெள்ளோ திமந்தன் முட்டையென
வாரிக் குவிக்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளிக் கணவா வருகவே.

என்று வரவேற்கும் வரவேற்புரையில், புலவரின் அறிவுக்கூர்மையும் சதுரப்பாடும் வியக்கத்தக்கதாய் அமைந்துள்ளது. முன்பெல்லாம் முத்துக்களைப் பற்றியும், முத்துக்கள் விளையும் இடங்கள், அவற்றின் உயர்வு தாழ்வுகள், இவைகளைப் பற்றியும் கூறி வந்தவர், இப்போது வேறு ஒரு கருத்தையுள்ளடக்கிக் கூறுகின்றார்.

''உன்னுடைய திருப்பதி அளவிறந்த முத்துக்களை வாரித் தருகின்றது அது உயர்ந்தோர். தாழ்ந்தோர் என்ற பாகுபாடின்றிக் கடையரான பள்ளர்களுக்கும், அஃறிணையான அன்னப் பறவைக்கும் கூட வேண்டுமளவு நித்திலங்களைநல்குகின்றது. அதுபோல் கடையனான என்னுடைய வேண்டுகோளை ஏற்று. என் விருப்பத்தை நிறைவேற்ற அருளுடன் என்னை நோக்கி வருகின்றாயே! உன்னுடைய திருப்பதியான இச்சீரலைவாய் முத்துக்களைச் சொரிவது போல், நீயும் நினது முத்தங்களைச் சொரிவதற்குத்தானே வருகின்றாய்'' என்ற கருத்தைக் கூறாமல் கூறி அவனை அன்புடன் வரவேற்கின்றார்.

இந்தப் பாடலைக் கேட்கும் குழந்தை குறும்புடன் அடியெடுத்து வைத்த இடத்திலேயே நின்று விடுகின்றது. புலவரின் திறமையை எண்ணியதால் எழுந்த மென்முறுவல் இதழ்களில் தவழ்ந்தோட, கருணையும், குளுமையும் கொண்ட வேல் விழிகளில் விஷமம் கலந்தோட அசையாமல் நிற்கின்றான் குழந்தையாகிய குமரப் பெருமான் அதனைக் காணும் புலவரின் மனம் குழம்புகின்றது. ஏதடா இது வம்பு? வந்தவன் நின்று விட்டானே! ஏன் இப்படி நின்று விட்டான்? ஒருவேளைநமது வரவேற்புரை சரியில்லையோ? அதனால்தான் குழந்தை நின்று விட்டதோ? ஒருவேளை நாம் முத்துக்களைப் பற்றியும், முத்தங்

களைப் பற்றியும் ஓயாமல் பேசியதால் அலுப்படைந்து போய் நின்று விட்டானோ என்றெல்லாம் எண்ணுபவர் இறுதியாகத் தம்முடைய வரவேற்புரைக்குச் சிறிது மாற்றந்தந்து அழைக்கின்றார்.

அப்பனே! அரிவாளால் அரிந்த செந்நெறி கதிர்களையெல்லாம் குவித்து அச்செற் போரின் மேல் வலிய எருதுகளைப் பிணித்து விட்டுப் போரடித்து வைக்கோலையும் நெல்லையும் வேருகப் பிரிக்கின்றனர் அவ்வாறு வைக்கோலினின்று விடுபட்ட நெல் மணிகளுடன் மென்மையான பதர்கள் கலந்துள்ளன. அப்பதர்களையெல்லாம் மேல் காற்றானது பிரித்தெடுக்கின்றது. பதர்கள் பிரித்தெடுக்கப்பட்ட நெல் மணிகளுடன் நித்தில மணிகளும் விரவிக் கிடப்பதால் வெள்ளி மலை போல் காட்சியளிக்கும் அந்நெற் குவையை, அழகியக் கடைக் கண்களால் கள்ள நோக்கு நோக்கும் உழத்தியர் தூய்மைப் படுத்துகின்றனர், அவர்கள் முத்துக்களை நெல்லிலிருந்து பிரித்தெடுத்து முத்துக்களை வெளியே யெறிகின்றனர் அவ்வாறு வெளியே வீசப்பட்ட முத்துக்களையெல்லாம் பள்ளர்கள் எடுத்துச் சென்று தாம் குடித்த கள்ளுக்கு விலையாக அதனை யளிப்பர் தூற்றி நன்றாகத் தூய்மை செய்யப்பட்ட நெற் குவியல் வடதிசையில் உள்ள பொன்னிறமான மேரு மலை போல் காட்சிதரும். இத்தகு செழிப்பு வாய்ந்த சீரலைவாயின் தலைவனே வருக! என்று அழைக்கின்றார்.

புள்ள மரிந்த கதிர்ச் செந்நெற்
        போரிற் பகடுதனை நெருங்கப்
பூட்டி அடித்து வைகளைந்து
        போதக் குவித்த பொலிக் குவையை
விள்ள அரிய குடகாற்று
        வீசப் பதடிதனை நீக்கி
வெள்ளிக் கிரிபோற் ககைவட
        மேரு கிரிபோல் மிகத்தூற்றிக்
கள்ளம் எறியுங் கருங்கடைக்கட்
        கடைசி பிரித்த மணிமுத்தைக்
களத்தி லெறிய அம்முத்தைக்
        கண்டு குடித்த கட்குவிலை
மள்ளர் அளக்குந் திருச்செந்தூர்
        வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
        வள்ளிக் கணவா வருகவே!

(தொடரும்)